விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 12 செவ்வாய்க்கிழமை (27.12.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 08

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து


# தமிழ்த் துணைப்படைகளின் தொடர்பை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும்!

## தமிழ்க்கூட்டமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழ்த்துணைப்படைகளினுடனான சகல தொடர்புகளையும் அரசாங்கம் துண்டிக்கவேண்டும். சமாதான முயற்சிகளில் ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு அதுவே ஒரேவழியென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவு குறித்து கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)



வடமராட்சிகிழக்கில் இடம் பெற்ற ஆழிப்பேரலை அனர்த்த ஓராண்டு நினைவு நிகழ்வில்...

# யாழில் இன்று துக்கதினம்

## உணர்வெழிச்சியுடன் அனுஷ்டிக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அண்மைய நாட்களில் யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் இராணுவத்தினரால் அப்பாவிப் பொதுமக்கள் சுட்டும் எரித்தும் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து இன்று யாழ்ப்பாணத்தில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் விடுத்துள்ளது. அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; கடந்த ஒரு சில நாட்களில் மட்டும் 13 இற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் படையினரால் கோரமாகச் சுடப்பட்டும் எரித்தும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மாமனிதரும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மூத்த அரசியல்வாதியுமான யோசப் பரராஜசிங்கம் அவர்கள் கிறிஸ்தவ தேவாலயத்தில் வைத்து சிறிலங்கா புலனாய்வுத்துறையினராலும் அதனுடன் சேர்ந்தியங்கும் ஒட்டுப்படைகளாலும் திட்டமிட்டு படுகொலைசெய்யப்பட்டுள்ளார்.

இதனைவிட புங்குடுதீவைச் சேர்ந்த இளையதம்பி தர்சினி என்ற இளம்பெண் சிறிலங்கா கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த பயங்கரமான சூழல்காரணமாக தமிழர் பிரதேசம் எங்கும் மயான பூமியாக காட்சியளிக்கும் நிலை தோன்றியுள்ளது.

இன்று இராணுவத்திற்குள் ஊடுருவியிருக்கும் அரசியல்வாதிகளே இந்தக்கொலைகள் அனைத்திற்கும் காரணமாக இருக்கிறார்கள். இராணுவத்தினரின் தொடரும் அராஜகத்தைக் கண்டித்தும் படுகொலைசெய்யப்பட்ட அப்பாவிப்பொதுமக்களுக்குமாக இன்றையதினத்தை பூரணதுக்கதினமாக கறுப்புக்கொடிகளை கட்டுவதனூடாகவும் சோக கீதங்களை இசைப்பதன் ஊடாகவும் அனுஷ்டிக்குமாறு அன்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டோ சாரதிகள் இருவர் திருமலையில் வெட்டிக்கொலை

திருகோணமலையில் இரு வெவ்வேறு சம்பவங்களில் இரண்டு ஆட்டோ சாரதிகள் கொல்லப்பட்டுள்ளனர். திருகோணமலை - யாழ்ப்பாணம் வீதியின்கிண்ணியாய்ப் பகுதியில்வைத்து நேற்று முன்தினம் இரவு நிமலரட்ணம் ரமணன் என்றஆட்டோ சாரதி குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனது (12 ஆம் பக்கம் பார்க்க)

## கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திமிலைத்தீவில் நேற்று அதிகாலை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் எம்.கருணாரத்ன (வயது 42) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-4)

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை

(வவுனியா)

புளொட் இயக்கத்தின் வவுனியா மாவட்ட அரசியல் இணைப்பாளர் திருப்பதி மாஸ்டர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று மாலை 5.30மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே இவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனைட் வீச்சு

யாழ்.தட்டாதெருச் சந்தி மற்றும் கைலாசபிள்ளையார் ஆலயப்பகுதியில் உள்ள காவலரண் மீது நேற்று மாலை 6.30 மணியளவில் சமநேரத்தில் கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இதன் போது ஏற்பட்ட சேதவிபரம் குறித்துத் தெரியவில்லை.

இத் தாக்குதல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களின் பகிஷ்கரிப்பால் அலுவலகங்கள் இழுத்து மூடப்பட்டன

### இயல்பு வாழ்க்கை திரும்பும்வரை பகிஷ்கரிப்புத் தொடருமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்று அரச ஊழியர்கள் கடமைக்குச் செல்லாததினால் அனைத்து அரச அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தது.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரை தமது வேலைப்பகிஷ்கரிப்புத் தொடருமென அரசஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் தாக்குதல் சம்பவத்தினால் தாம் கடமைக்குச்செல்ல முடியவில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தி யாழ்.குடாநாட்டில் இயல்புநிலை திரும்பும் வரை தமது போராட்டம் தொடருமென ஊழியர்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

சில அரச உத்தியோகத்தர்கள் வேலைக்குச்சென்ற போதிலும் ஏனையவர்கள் வராததினால் அவர்கள் திரும்பிச்சென்றனர். யாழ்.செயலகம், பிரதேச செயலகங்கள், மாநகர சபை, பிரதேசசபைகள், உள்ளூராட்சித்திணைக்களங்கள் உட்பட அனைத்து அலுவலகங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன.

தொழில்நுட்ப நிறுவனம், தொழில்நுட்பக்கல்லூரி என்பனவும் இயங்கவில்லை. வங்கிகளுக்கு நேற்று விடுமுறை என்பதினால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் கடமைக்குச் செல்லவில்லை. அவர்கள் இன்று பகிஷ்கரிப்பில் (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.வில் இருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதி சந்திவெளி எனும் இடத்தில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இருவரும் இராணுவத்தினர் மீது தாக்குதல்நடத்த முற்பட்டதாகவும் இதனையடுத்து இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இவர்கள் கொல்லப்பட்டதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்,

இரு சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொ.பே.கட்டணங்கள் விரைவில் குறைக்கப்படும்

(கொழும்பு)

தொலைபேசிக் கட்டணங்களை குறைப்பதற்கென விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில், ஆசிய நாடுகளில் இலங்கையில்தான் ஆகக்கூடிய தொலைபேசிக் கடடணங்கள் அறிவிடப்படுகின்றன.

தொலைபேசிக் கட்டணங்கள் விதிக்கப்படும் முறை சம்பந்த மாக அடுத்த மூன்று மாத காலத்தில் விரிவான ஆய்வொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட சகல தரப்பிரனரது கருத்துக்களும், அறியபபட்டதும் தொலைபேசி சேவைக்குரிய ஆகக்குறைந்த கட்டணம் பற்றி தீர்மானிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(த-9)

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# மறுவாழ்வளிக்க விசேடதிட்டம் உருவாக்கப்படவேண்டும்-ஐ.தே.க

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புதுவாழ்வு அளிக்க விசேட செயற்திட்டமொன்று உருவாக்கப்படவேண்டுமென்று ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துளளது.

பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் அகதிமுகாமகளில் தங்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செலயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு நிஜயான ஒரு வருமானத்தை ஏற்படுத்தி வாழ்க்கைத்தரத்தை உயர்தடதவும நிரந்தர வதிவிடங்களை ஏற்படுத்திக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

பெற்றோரை இழந்துள்ள குழநதைகளின் எதிகால நலங்கருதி துரித செயற்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேணடுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-9)

# பிற்போடப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்று நடைபெற விருந்த மாணவர் தேர்ச்சி அறிக்கை வழங்கலும் பெற்றோர் சந்திப்பும் தற்போதைய யாழ்.குடாநாட்டின் அசாதாரண நிலைமைகள் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

எனவே இம் மாணவர் தேர்ச்சி அறிக்கை வழங்குதலும், பெற்றோர் சந்திப்பும் பாடசாலை ஆரம்பமாகவிருக்கும் நாளான எதிர்வரும் 2ஆம் திகதியே இடம்பெறுமென்று கல்லூரி அதிபர் கைலாய பிள்ளை அறிவித்துள்ளார். (ற-9)

# கருப்பை நோயியல் விளக்கம்

**பெண்மை மகப்பேற்றுடன் தான் பூரணமடைகின்றது. மகப்பேற்றுக்கு முக்கியமானது கருப்பை. இக்கருப்பையில் இன்று எத்தனையோ நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. கருப்பை நோயியல் பற்றி கேள்வி-பதில் முறையில் பதிலளிக்கிறாா டாக்டர் சி.யமுனாநந்தா.**

**கேள்வி:-** கருப்பையில் பொதுவாக நோய்நிலைகள் எந்த வயதில் ஏற்படலாம்?

**பதில்:-** 40வயதிற்குப்பின்

**கேள்வி:-** 40 வயதிற்கு பின்



பெண்க்ளுக்கு ஏற்படும மாதவிலக்குடன் தொடர்புடைய நோய் நிலைகள் எவை?

**பதில்:-** மிகவும் அதிகமாக குருதிவெளியேறுதல், கருப்பைக் கட்டிகள், மாதவிலக்குடன் தொடாபான கடுமையான நோ, கருப்பை அகவணி வேறு இடங்களில் காணபபடல், கருப்பை வெளித்தள்ளல், கருப்பைப்புற்று நோய்.

**கேள்வி:-** மேற்கூறிய நோய் நிலைகளிற்கு சத்திரசிகிச்சை முறைமூலம் அல்லாது அளிக்கக கூடிய சிகிச்சை முறைகள் யாவை?

**பதில்:-** அதிக குருதிப்பெருக்கைக் கடடுப்படுத்த குளிசைகள் அல்லது ஊசிமூலம் மருந்துகள் அளிக்கலாம். கருப்பையினுள் ஓமோன்கள் புறத்துறிஞ்சப்பட்டலூப்பிளை வைக்கலாம். மிக அண்மையில் கருப்பை அகவணியினை மட்டும் அகற்றும் முறைகளும் நடைமுறையில் உள்ளன.

**கேளவி:-** கருப்பையினை சத்திரசிகிச்சை மூலம் அகற்றுவதைத தீர்மானிக்க வேண்டியவர் யார்?

**பதில்:-** வைத்திய நிபுணர் நடைமுறையில் உள்ள தீர்வுகளைக் கூறுவார். ஒவ்வொரு தாய்மாருமே தங்களது தீமானத்தை எடுத்தல் வேண்டும்.

**கேள்வி:-** கருப்பைச் சததிர சிகிச்சையில் உளள வழிவகைகள் யாவை?

**பதில்:-** வயிற்றுப்பகுதியினூடாகச் செய்யப்படும் சத்திர சிகிச்சை, லப்பரஸ் கோப் உதவியுடன் செய்யப்படும். பெரும்பாலும் குருதிப் பெருக்கிற்கு சத்திர சிகிச்சை செய்யும்போது கருப்பைக்கழுத்துப்பகுதி தவிர்க்கப் படுகின்றது.

**கேள்வி:-** கருப்பையினை சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றும்போது சூலகத்தினையும் அகற்றல் அவசியமா?

**பதில்:-** சாதாரணமாக மாதவிடாய் 51வயதளவில் நின்று விடும். எனவே இவ்வயதை அண்மிப்பவர்களில் சூலகத்தினையும் அகற்றல் நன்று. இதனால் ஆயுட்காலம் 2-3வருடங்கள் குறைவடைவதைத் தடுக்கலாம். இதன பின் ஓமோன்மாற்றீடுகள் செய்யப்படல் வேண்டும்.

**கேள்வி:-** மேற்கூறிய சந்தர்ப்பத்தில் சூலகத்தினை அகற்றுவதால் ஏற்படும் நன்மை?

**பதில்:-** சூலகத்தில் புற்று நோய் ஏற்படுவது தவிர்க்கப்படும். வயிற்றில் ஏற்படும் அசாதாரண நோ தவிர்க்கப்படும்.

**கேள்வி:-** சத்திரசிகிச்சையின் பின் ஏற்படும் பிரச்சினைகள் யாவை?

**பதில்:-** சத்திரசிகிச்சையின் போது குருதிப் பெருக்கு ஏற்படலாம். நீண்ட நாட்களின் பின் சிறுநீர்கழித்தலில் பிரச்சினைகள், மலச்சிக்கல், கேணியா என்பன ஏற்படலாம்.

**கேள்வி:-** சத்திர சிகிச்சையின் பின் அவதானமாக இருக்க வேண்டியவை யாவை?

**பதல்:-** கிருமித்தொற்றலுக்கு இடம்கொடுத்தல் கூடாது. இரண்டாம் நாள் கதிரையில் அமரலாம். சாதாரண இலகு உணவை

**டாக்டர் சி.யமுனாநந்தா**

உண்ணலாம். 3ஆம் நாள் கட்டிலில் இருந்து சிறிது தூரம் நடக்கலாம். நான்காம் நான்காம் நாள் வீட்டிற்குச் செல்லலாம். 2 கிழமையில் வேலைக் குச்செல்லலாம். ஆனால் பாரமான பொருட்களை 3 மாதங்கள் வரை தூக்கக் கூடாது.

**கேள்வி:-** கருப்பையகற்றல் சததிரசிகிச்சையின் உயவியல் தாக்கம் யாது?

**பதில்:-** கருப்பையினை அகற்றல் என்பது பெண்மையினை அகற்றல் போன்ற உளவியல் தாக்கத்தினை தாய்மாருக்கு ஏற்படுத்தும். இதனால் அவர்கள் பல உள நெருக்கீடுகளுக்கு உட்படுவர். இதற்கு சிறந்த உள வளத துணை வழங்கல் வேண்டும். மேலும் கணவனிற்கும் குடும்ப விரிசல் ஏறபடலாம். அதனையும் நிவர்த்தி செயதல் வேண்டும்.

அதிகம் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவோருக்கு சத்திர சிகிச்சைக்கு முனபான குடும்ப உளவத்துணை வழங்கல் வேண்டும். சிலவேளைகளில சத்திர சிகிச்சையினைத் தவிர்த்து மாற்று வழிகளை நாடவேண்டும்.

# இராசி பலன்

**27.12.2005**
**(மார்கழி 12, செவ்வாய்க்கிழமை**
**ஏகாதசி பிற்பகல் 1.36 மணிவரை**
**சுவாதி காலை 7.02 மணிவரை**
**இராகுகாலம் 3.27-4.57 மணிவரை**
**சுபநேரம் 10.57-12.27 மணிவரை**
**ஏகாதசி விரதம்**

**மேடம்** களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், தெய்வ நம்பிக்கை, பெரியோர் சந்திப்பு.

**இடபம்** எடுத்தகாரியம் கைகூடும், தேகநலன், செய்தொழில் விருத்தி, போசன நன்மை.

**மிதுனம்** புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், மரியாதைக்குறைவு, பணத்தட்டுப்பாடு.

**கடகம்** தாய்வழி உறவு, புதியசிந்தை, எடுத்த காரியம் தமதமாகும், நண்பர்கள் சந்திப்பு.

**சிங்கம்** தொழில் நன்மை, பிரயாணம், நல்ல முயற்சி, பேசனசுகம்.

**கன்னி** பனவிரயம், உணர்ச்சிவசப்படல், எடுத்த காரியம் தா்மதமாகும், வீண்பகை.

**துலாம்** சிந்தனை மிகுதி, புதிய முயற்சி, தொழில ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு.

**விருச்சிகம்** காரிய தாமதம், பணவிரயம், சயனசுகக குறைவு, பிரயாணம்.

**தனுசு** நல்ல காரியம், உறவினர் கலந்துரையாடல், விருந்துபசாரம், தெய்வசிந்தை.

**மகரம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், மேன்மை, சுபநிகழ்வு, பிறர் உதவி.

**கும்பம்** கட்டுப்பாடு, சரீரப்பிரயாசை, முயற்சி, தாமதம், பணப்பற்றாக்குறை.

**மீனம்** எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பிரயாணபயம், நிலைமாற்றம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# பொதுமக்கள் மீதான தாக்குதல் தொடருமாயின் படைத்தரப்பு அதிக விலைகொடுக்க வேண்டியிருக்கும்

## -கஜேந்திரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் அப்பாவிப் பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கும், படுகொலைகளுக்கும் கஜேந்திரன் எம். பி. கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.



இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ்ப்பாணம் முனியப்பர் கோவில் பகுதியில் இராணுவத்தினர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அதில் இராணுவ மேஜர் ஒருவர் காயமடைந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது தரப்பில் மேஜர் காயமடைந்தார் என்பதற்காக சிங்களப்படைகள் பயப்பீதியில் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் ஐந்துபொது மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் கராஜ் ஒன்றில் வேலைசெய்பவர் என்றும் இன்னுமொருவர் யாழ்.மத்திய கல்லூரி காவலாளி என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தாக்குதல் நடாத்தியவர்கள் தாம் தப்பிவந்து விட்டதாக அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில் தாக்குதல் நடாததியவர்களை தாம் சுட்டுக்கொன்று விட்டதாக கூறி தமது கொலைவெறியை நியாயப்படுத்த படைத்தரப்பு முயல்கிறது.

இவ்வாறான பொதுமக்கள் மீதான படுகொலைகள் தொடருமாயின் இதற்காக படைத்தரப்பு அதிகவிலை கொடுக்கவேண்டி இருக்கும். இக் கொலைச்சம்பவத்தினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# ஒரு இலட்சம் பேருக்கு ஆறு மாதத்துள் வேலை

(சாவகச்சேரி)

அடுத்தவருடம், முதல் ஆறுமாத காலத்திற்குள் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படுமென கிராம கைத்தொழில் மற்றும் சுயதொழில் அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று மாத காலத்தில் தொழில் நுட்பக் கிராமங்கள் அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவித்த நாவின்ன 6 மாத காலத்தில் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு பெற்றக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் எதிர்வரும் 29ஆம் திகதி 350 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)


# வேலை வாய்ப்பு-2005

1.பிரதேச செய்தியாளர்கள்(ஆண்கள்)
2.அலுவலகச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
3.விளையாட்டுத்துறைச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
4.உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)

கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி

குறிப்பு:-பத்திரிகைத்துறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5.பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (இருபாலாரும்)
6.சிற்றூழியர்கள்(இருபாலாரும்)
7.ஒவ்செற் பயிலுநர் (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை:-க.பொ.த(சாதாரணம்)

விண்ணப்பிக்கும் பதவியுடன் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை,

நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி,
இல. 3, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 31.12.2005க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

# மனிதவுரிமை வாதியை படுகொலை செய்த அரச பயங்கரவாதத்தைக் கண்டிக்கிறோம்

## -பத்மினி சிதம்பரநாதன் எம்.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை வாதியைப் படுகொலை செய்த அரச பயங்கரவாதத்தைக் கண்டிப்பதாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் மூத்த அரசியல் வாதியுமான ஜோசப் பரராஜசிங்கம் நத்தார் பண்டிகை ஆராதனை நிகழ்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை குரூரமாக மட்டககளப்பு சென்.மேரிஸ் தேவாலயத்தில் வைத்து 25ஆம் திகதி அதிகாலை 1.10 மணியளவில் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இதனை நாம் மிக வன்மையாக்க கண்டிக்கின்றோம்.

மனித உரிமை தொடர்பான விடயங்களில கூடிய அக்கறை கொணட இவர் தாயகத்திலும ஒரு மனித உரிமை அமைப்பை கட்டியெழுப்பப்பாடுபட்டவர்.

தமிழ்த் தேசியக் கூடடமைப்பின் வெளிவிவகாரக் குழுவிலும் உறுப்பினராக அங்கம் வகித்து இராஜதந்திர ாதியான தொடாபுகளை ஏற்படுத்தி தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மறல்களையும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான நியாயப்பாடுகளையும சர்வதேச அரங்கில் எடுத்துக் கூறி வந்தார்.

இவரின் இத்தகைய பணிகளை நிறுத்துவதே கொலையாளிகளின் நோக்கமாகும். மனித உரிமைகள் பற்றி அதிகம் பேசும் சர்வதேச உலகம் இக்கொலைக்கு என்ன சொல்லப்போகின்றது என்பதனை தமிழ் மக்கள் எதிர்பார்த்த படியே உள்ளனர்.

தமிழ் மக்களின் குரலை ஒடுக்குவதற்காகவே இத்தகைய அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. தமிழ் மக்களின் குடியிருப்பு நிலங்களில் இராணுவம் பிரசன்னமாக இருந்தபடியும் துணை இராணுவக குழுக்களை உதவிக்கு வைத்தபடியும் இப்பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது.

இந்த இராணுவ, துணை இராணுவ பிரசன்னத்தை அகற்றி தமிழ் மக்கள் தமது ஜனநாயக வாழ்வை வாழ்வதற்கு சர்வதேச சமூகம் ஆக்கபூர்வமான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும். தவறின் தமிழ் மக்கள் ஆயுத ரீதியாக இதனை எதிர்கொள்வதே அவர்களுக்குள்ள ஒரேயொரு வழியாக அமைந்துவிடும என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இராணுவமும் ஜனாதிபதியுமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்

## -கஜேந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு கஜேந்திரன் எம்.பி கடும் கண்டனம் வெளியிட்டுளளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

மட்டக்களப்பிலுள்ள தேவாலயம் ஒன்றில நத்தார் ஆராதனையில் ஈடுபட்டுக்கொணடிருநதபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

கிறிஸ்தவமக்களின் புனித நாளான நத்தர் தினத்தில் அவர்களால புனிதமாகப் போற்றப்படும் தேவாலயத்தினுள வைத்தே இக் கோரக் கொலை இடம்பெற்றுள்ளது.

கத்தோலிக்க மக்களையும், மதத்தையும் அவமதிக்கும் விதமாக மனிதநேயமற்ற வகையில் கோழைத்தன்மாக இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்காகவும் தமிழ் மக்களின் உரிமைக்களுக்காகவும் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உழைத்தவர். தமிழர் தாயகத்தில் இலங்கை இராணுவம் அவ்வப்போது மேற்கொண்டு வந்த மனிதப்படுகொலைகளை சர்வதேச சமூகத்திற்கு அம்பலப்படுத்துவதில் முன்னின்று துணிச்சலோடு செயற்பட்டவர்.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் தமிழ்த் தேசியத்தினை சிதைப்பதற்கும் பிளவுபடுத்துவதற்கும் கிழக்கு மாகாணத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது அதனை முறியடிப்பதில் எமது தலைவரோடு பக்க பலமாக நின்று அந்த சதி முயற்சியை முறியடிப்பதில் அர்ப்பணிப்போடு உழைத்தவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழுத்தலைவராக இருந்து தமிழ் மக்கள் மீது இராணுவம் மேற்கொள்ளும் அடாவடித்தனங்களையும், அடக்குமுறைகளையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளையும சர்வதேச இராஜதந்திரிகளுக்கு எடுத்து விளக்குவதில் முன்னின்று செயற்பட்டவர்.

இராஜதந்தரிகளால் நன்றாக அறியப்பட்ட இந்த மூத்த அரசியல்வாதியின் படுகொலை என்பது ஸ்ரீலங்கா அரசினால் நன்கு திட்டமிடப்பட்டு இராணுவப்புலனாய்வுத் துறையினராலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை ஆயுதக் குழுக்களினாலுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்கொலைக்கு இராணுவமும், ஜனாதிபதியுமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும். மிலேச்சத்தனமான இப் படுகொலையினை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன் எனறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# ஜோசப் எம்.பியின் கொலைக்கு அரசாங்கம் கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையை அரசாங்கம் வன்மையாகக் கண்டிததுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலை ஜனநாயகத்துக்கு எதிராக மேற்கொல்லப்பட்ட தாக்குதலாகவே தாம் கருதுவதாக அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட ஜோசப் பரராஜசிங்கத்தின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி தனது ஆழந்த அனுதாபத்தைத் தொிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிபபிடபபட்டுள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கண்டுபிடித்து சட்ட நடவடிக்கை எடுத்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம், பொலிஸ மா அதிபரை பணித்துள்ளது. அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கவும ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படடுள்ளது. (ச-8)

# மலையகம் எங்கும் அஞ்சலி

(கொழும்பு)

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியின் படுகொலைக்கு மலையக மக்கள் முன்னணி கண்டனம் வெளியிட்டுள்ளது.

மறைந்த ஜோசப் பரராஜசிங்கத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் விதத்தில் மலையக தோட்டங்களெங்கும் கறுப்புக் கொடி பறக்கவிடப்படவேண்டும் எனவும் மலையக மக்கள் முன்னணியின் கொடியை அரைக் கம்பத்தில் ஏற்றி வைக்கும படியும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் அனைத்து மலையக மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலையக நகரப் பகுதிகளிலும் அஞ்சலி தெரிவிக்கும் விதத்தில் பதாகைகளைத் தொங்க வைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வன்னி, கிளிநொச்சியில் நடைபெறும் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் நூற்றுக்கணக்கில் வாகனங்களில் சென்று கலந்து கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுளளதாக மலையக மக்கள முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன தெரிவித்துள்ளார். (ற)

## ஜோசப் எம்.பி படுகொலைக்கு

# தென்கிழக்கு ஊடகவியலாளர் சங்கம் கடும் கண்டனம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம சுட்டுக கொலலப்பட்டதை தென்கிழக்கு ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

கிழக்கிலங்கை பத்திரிகை அபிவிருத்தி ஸ்தாபனத்தின் தலைவரான ஜோசப் பரராஜசிங்கம் ஊடகவியல் அமைப்பை உருவாக்கி கிழக்கில் தமிழ் ஊடகவியல்ாளர் பலரைத் தட்டிக்கொடுத்து உரமூட்டியவர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஓயாது குரல் கொடுத்த ஒலி; இன்று ஓய்ந்திருப்பது ஒட்டு மொத்த தமிழ் சமூகததையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது என்று தெரிவித்து தென்கிழக்கிலங்கை ஊடகவியலாளர் சங்கம் இப்படுகொலையை வன்மையாகக கண்டித்துள்ளது. (ற)

# ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவு ஈடுசெய்யப்படமுடியாத பேரிழப்பு

## மா.க.ஈழவேந்தன்

ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும் என்று மா.க. ஈழவேந்தன் எம.பி தொிவித்துளளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

மூத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தின் மறைவு தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும். குறிபபாக தென்தமிழ் ஈழமாகிய மட்டக்களப்பு மண்ணைக் காப்பாற்ற நாம் பெரும முயற்சி எடுத்துவருகின்ற இவ்வேளையில், அம்மண்ணின் மைந்தர் மட்டக்களப்பு தூய மரியாள் தேவாலயத்தில் பாதுகாப்போடு வந்த நிலையில் கூட ஈவிரக்கமற்ற முறையில தேவாலயத்தினுள்ளேயே துப்பாக்கி முனைக்குப் பலியானது தாங்கமுடியாத துயரினைத் தருகிறது.

மென்மைப் போக்கோடு அவர் காட்சியளித்த நிலையிலும் மென்மையான சொற்களை அவர் கையாண்ட போதும் கொள்கையில் மிக்க உறுதி படைத்தவர்.

சென்ற புதன்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நாம் அலரிமாளிகையில் சந்தித்து உரையாடியதை அடுத்து ஜனாதிபதி எம்மிடம் எடுத்துரைத்த கருத்துக்கள் எமக்குத் திருப்தி அளிப்பதாக இருக்கவில்லை.

கடுமைப்போக்குடைய முப்படையினரையும மீறி இவர் ஏதும் தமிழ மக்களுக்கு நன்மை அளிக்கின்ற முறையில் செயற்படுவாரா? என்பதில் எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை என்று அவர் கூறிய கருத்து ஆழம் மிக்க கருத்தாகும்.

மேலெழுந்த நிலையில் மென்மைப் போக்குடையவராக காட்சியளித்தபோதிலும் தமிழனின் அடிப்படைச் சிக்கலையொட்டி அவர் கடும்போக்கு உடையவராய் விளங்கினார் பேச்சில் மென்மை. ஆனால், கொள்கையில் உறுதி. கிழக்கு மாகாணத்தை வட மாகாணத்தில் இருந்து பிரிக்கும் சதி முயறசியை முறியடித்து நாம் ஒன்றுபட்டு வாழ்ந்தால் தான் எமக்கு வாழ்வு உண்டு என்பது அவரின் உறுதியான கோட்பாடு.

நாடாளுமன்றத்தில் இவர் பேசியது மிகக் குறைவானாலும் அவர் பேச்சில் ஆணித்தரமான கருத்துக்கள் இருக்கும், ஆழம் இருக்கும். மாற்றானையும் தம்வயப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் பல, முயற்சியில் தோல்வியுற்ற போதும் அவர் சலிப்படையவில்லை.

முதிர்ச்சி பெற்றுள்ள மூத்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான இவரை இழந்துள்ளோம். கிழக்கு மாகாணத்தில் இவர் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை எளிதில் நிரப்புவது கடினம்.

எனினும், எதையும் தாங்கும இதயத்தோடு எம் இலட்சியததை அடையும் வரை எம் பணியைத் தொடர்வதே அவருக்கு நாம செய்யும் கைமாறாகும். உள்ள உயிர் ஒன்று தான் அது என்றோ ஒருநாள் போகப் போவது உறுதிதான். அது தமிழ் மண்ணிற்காகப் போகட்டும் என்று உறுதி பூணுவோமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## வட - கிழக்கின் தற்போதைய நிலைமைக்கான

# உண்மையான அடிப்படைக் காரணத்தை சர்வதேச சமூகம் கண்டறிய வேண்டும்

## வட - கிழக்கு மனிதவுரிமை செயலகம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினா ஜோசப் பரராஜசிங்கம படுகொலைக்கு வடக்கு, கிழக்கு மனித உரிமைச் செயலகமான நெசோர் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், நெசோர் அமைப்பின் தலைவர் எம்.எக்ஸ் கருணாரட்ணம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எமது வடக்கு கிழக்கு மனத உரிமைச் செயலகமான நெசோரின் மதிப்புமிகு உறுப்பினராக இருந்தவர் ஜோசப் பரராஜசிங்கம. நத்தார் பண்டிகை பிரார்த்தனையின் போது அவர்படுகொலை செய்யப்பட்டுள்ளார். தமிழ மகக்ளின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவர் வெளிப்படுத்தியதாலேயே அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நகரின் இணை பேராலயத்தில் நத்தார் பண்டிகையையொட்டி மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பெருமளவான மக்கள் திரண்டிருந்தனர் தேவாலயத்துக்குள்ளேயே ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைக் காப்பாற்ற முயன்ற அவரது துணைவியார் சுகுணம் ஜோசப் பரராஜசிங்கம் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்துள்ளார்.

நெசோரின் மதிப்புமிகு 2ஆவது உறுப்பினரை நாம் ஒரே ஆண்டில் இழந்துவிட்டோம். நெசோரின் அமபாறை உறுப்பினரான ஏ.சந்திரநேரு கடந்த பெப்ரவரியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1990இல் நாடாளுமன்ற உறுப்பினராக பரராஜசிங்கம் பணியேற்ற போது இலங்கையின் கிழக்குப் பகுதியில் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான பெருமுயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இது விடயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அனைத்து சவால்களுக்கும் முகம் கொடுத்தார். மனித உரிமை மறல்களை உரிய ஆவணங்களோடு சர்வதேச சமூகத்துக்கு எடுத்து விளக்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினராக, தமிழர்களின் பிரதிநிதியாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட போது அந்நாடுகளின வெளிவிவகார அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து இலங்கையின் வடககு கிழக்கில் நிகழததப்படுகிற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விளக்கம் அளித்தார்.

கடைசியாக டிசம்பர் 10ஆம் திகதியன்று சர்வதேச மனத உரிமை நாள் நிகழ்விற்காக நெசோர் தலைமையகம் வந்திருந்தார். மட்டக்களப்பில் நெசோரின் அலுவலகத்தைத தனது சொந்த முயற்சியில் திறப்பதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தார். மட்டக்களப்பில் மனித உரிமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் எதுவித சவால்களையும் எதிர்கொளவேன் என்றும் அவர் கூறியிருந்தார்.

நெசோரின் கடந்த ஒன்றரை ஆண்டு காலப் பணிகளில் வடக்கு கிழக்கின் மனித உரிமை மீறல்களை நாம் சர்வதேச சமூகத்திறகு எடுத்துச் சென்றுள்ளோம். எமது பணிகளின் காரணமாக மட்டக்களப்பு அம்பாறையில் அலுவலகங்களைத் திறக்குமாறு சர்வதேச சமூகம் எம்மை வேண்டிக்கொணடது. மட்டக்களப்பு அம்பாறையில் எமது முக்கிய உறுப்பினர்கள் இரவரும் ஒரே ஆண்டில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையானது எமக்குப் பேரிழப்பாகும்.

ஜோசப் பரராஜசிங்கத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களே இந்த சம்பவத்துக்கும் பொறுப்பானவர்கள். வடக்கு கிழக்கின் தற்போதைய நிலைமைகளை அவதானித்து இந்த நிலைமைகளுக்கான உண்மையான அடிப்படைக் காரணததை அறியுமாறு சர்வதேச சமூகத்தை நாம் வேண்டுகிறோம என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# இன்று ஒரு தகவல்

## ஆசை

" எனக்கு வாழ்வில் ஒரேயொரு ஆசை தான் சார்" என்றார் ஒருவர். 'அது என்ன?' என்று கேட்டேன். "ஆசைகளை ஒழித்துவிடவேண்டும் என்பதுதான் எனது ஆசை" என்றார்.

இப்படி ஆசைகளை ஒழிக்க வேண்டும் என்பதையே ஒரு ஆசையாகக் கொள்வது அபத்தம் என்கிறார் ஒரு பெரியவர். இதுபோல் ஆசைகளை ஒழிக்க ஆசைப்பட்டால் அந்த நோக்கம் நிறைவேறாதாம். அந்த முயற்சியால் புதிதாக சில துன்பங்கள் தான் வந்து சேருமாம். அதில் புதிதாக ஒரு ஆசை தலைதூக்கும் என்கிறார் அவர்.

ஆசைகளைத் தானாக விழவைத்து விடலாம். அதற்கு வழி என்ன தெரியுமா? "எந்தவொரு ஆசையையுமே பூரணமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்பதை உணரவேண்டும். அதை உணர்ந்தால் ஆசை கள் தானாக விழுந்துவிடும்.

அதை விட்டு விட்டு ஆசைகளை விட்டு விடவேண்டும் என்பதையே ஒரு ஆசையாக வைத்துக் கொண்டு அதற்காக கடும் முயற்சிகளையும் செய்துகொண்டு நான் ஆசைகளை விட்டுவிட்டு ஞானோதயம் அடைவதற்குக் கடின முயற்சிகள் செய்கிறேன் சார்" என்று சொல்லிக் கொண்டிருந்தால் எந்தக் காலத்திலும் ஞானோ தயம் வரப் போவதில்லை. அதற்குப் பதிலாகத் துன்பம் தான் வந்துசேரும்.

எந்தவொரு ஆசையையும் பூரணமாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்பதை உணரவேண்டும் என்கிறார் பாருங்கள். அது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்.

ஒரு ராஜா இருந்தார். அவரது மனதில் அமைதி இல்லை. எப்போதும் கஷ்டப்பட்டுக்கொண்டேயிருந்தார். இந்தத் துன்பத்தைப் போக்குவதற்குப் பல வழிகளில் ஏதோ முயற்சிகளை செய்து பார்த்தார். அதாவது ஒரு வேதாந்தியைத் தேடிப் போனார். அவரைப் பார்த்துக கேட்டார்."ஐயா என்னுடைய துன்பங்களிலிருந்து நான் விடுபட வேண்டும் அதற்கு சுலபமாக ஏதாவது ஒரு வழி இருந்தால் சொல்லுங்கள்" என்று கேட்டார்.

அதற்கு அந்த வேதாந்தி சொன்னார் "அதற்கு ஒரு வழி சொல்கிறேன அதுபோல் செய் ! அதாவது உனது ராஜ்ஜியத்திற்குள்ளே போதும் என்ற மனதுடன் வாழும் ஒருவனைக கண்டுபிடித்து அவனுடைய சட்டையை வாங்கி நீ போட்டுக்கொள்ளவேண்டும். அப்படிப் போட்டுக் கொண்டால் உனது துன்பம் தீர்ந்துவிடும்" என்றார்.

உட்னே ராஜாவுக்கு மகிழ்ச்சி. அரணமனையில் இருந்த அத்தனை பேரையும் ஆளுக்கு ஒரு பக்கமாக அனுப்பினார். தேடச் சொன்னார். 'போதும்' என்ற மனமுடைய ஒருவனை தேடிக் கண்டுபிடித்து கொண்டு வரச் சொன்னார். எங்கெங்கேயோ தேடிக் கடை சியாக ஒரு ஆளை கண்டுபிடித்தார்கள். அவன் போதும என்ற மனதோடு இருப்பவன் தான்.

ஆனால் அவனிடம் சட்டை எதுவுமில்லை. இடையில் கட்டியிருக்கும் துண்டே போதும் என்ற மனதோடு அவன் வாழ்ந்துகொண்டிருக்கிறான். சட்டை இருந்தால் தானே ராஜா வாங்கி மாட்டிக்கொள்ள முடி யும்? அந்த வேதாந்தி ஏன் அப்படிச்சொன்னார் என்ப தற்கான அர்த்தம் இப்போதுதான் ராஜாவுக்கு புரிந்தது.

இதுவரைக்கும் சொன்னதெல்லாம் "ஞானமார்க்கத்தைத் தேடிக்கொண்டிருப்பவனுக்கான தகவல்" இன்றைய இளைஞர்கள் இதைக் கேட்டுவிட்டு நமக்கு ஆசையே வேண்டாமென்று முடிவெடுத்துவிட்டால் வாழ்வில் முன்னேறவே முடியாது. நமது முயற்சிக்கு ஆசை தான் தூண்டுகோல்.

அதனால் இந்த ஆசையையும் அந்த ஆசைய்யை யும் போட்டுக்குழப்பிக் கொள்ளக்கூடாது. ஆனால் ஒன்று பேராசை நமக்குத் தேவையில்லை. நாம் படும் ஆசையிலும் ஒரு நியாயம் இருக்க வேண்டும். ஏனென்றால் நம்மில் சிலர் "நீங்கள்தானே சார் சொன்னீர்கள் அதனால் தான் ஆசைப்பட்டேன் அறை கிடைத்தது தான் மிச்சம்" என்பார்கள் கன்னத்தைத் தடவிக் கொண்டே.அதனால் இப்போதெல்லாம் எந்தத் தகவலைச் சொன்னாலும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது.

ஒரு ஆள் ஒரு கடை வைத்து வியாபாரம் செய்து கொணடிருந்தான். அவனுக்கு மிகவும் பேராசை நிறையப் பணம சேர்க்க வேண்டும் என்று. திடீரென்று ஒருநாள் அவ னுக்கு உடல் நிலை மிகவும் மோசமாகிவிட்டது. இனி மேல தப்புவது கஷ்டம் என்ற நிலை. மரணப்படுக்கையில் இருக்கிறான். உறவினர்கள் சுற்றி அமர்ந்திருந்தார்கள்.

இவன் மெதுவாகக் கண்ணைத்திறந்து "என் மனைவி எங்கே?" என்றான்."இதோ இருக்கிறேன்" என்றார் அவர்."மகன்மாரெல்லாம் எங்கே?" என்றான். 'இதோ இருக்கிறோம்' என்றனர். 'மகள்மார் எங்கே?' என்றான். எல்லாரும் இஙகே தான் இருக்கிறார்கள்.நீங்கள் கவலைப் படாமல் ஓய்வெடுங்கள் என்றார் மனைவி. அவன் மெதுவாக கஷ்டபபட்டு வாயைத் திறந்து அடப்பாவிகளா? எல்லோரும் இங்கே இருந்தால் கடையை யார் பார்ப்பது? என்றானாம்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஐந்து பொதுமக்கள் கொலைக்கு பதிலடியாக ஐம்பது இராணுவத்தினர் கொலை செய்யப்படுவர்

## பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை

(கொழும்பு)

யாழ். நகரில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெறற தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து பேரும் அப்பாவகள் என்றும் பொங்கியெழும் மக்கள் படையைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டதாக படைத்தரப்பு கூறுவது அப்பட்டமான பொய் என்றும் பொங்கியெழும் மக்கள் படை அறிக்கை வெளியிட்டுள்ளது. பொங்கியெழும் மக்கள் படை கடந்த சனிக்கிழமை இரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, யாழ். நகரில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்திய இருவரும் பாதுகாப்பாக தளத்திற்குத் திரும்பி விட்டனர்.

யாழ. குடாநாட்டில் மக்கள் படையாகிய நாங்கள் தன்னியக்க துப்பாக்கி மற்றும் சிறியரக ஆயுதஙகள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றோம்.

இந்தத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் அப்பாவிப் பொது மக்களை மோசமாகத் தாக்கிவருவதுடன் கொலை செய்தும வருகின்றனர்.

சாவகச்சேரி நகரில் இளம் பெண்ணொருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் யாழ். நகர்ப் பகுதியில் நான்கு இளைஞர்களும் பெண் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் மற்றும் பொது மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் என்பவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த 5 பேர் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப்பதிலாக யாழ். குடாநாட்டில் 50 இராணுவத்தினரை கொன்று குவிக்கும் வரை மக்கள் படையின் பணி தொடரும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

# ஏ-9 பாதையை மூடிவிடுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை

## -சிஹல உறுமயவின் முன்னாள் தலைவர்

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள போதே தொடர்ச்சியாக கொலைகளில் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தல் வேண்டும். அச்சுறுத்தும் கடிதங்களை வெளியிடுவதில் மாத்திரம் அர்த்தம் இல்லை என தேசிய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.எல்.குணசேகர தெரிவித்துள்ளார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை கைவிடவேண்டும் என்பதிலலை. ஆனால் மீறல் சம்பவங்களை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தால் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது.

பதிலடி கொடுப்பதன் மூலமாக புலிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்படல் வேண்டும். உதாரணமாக, ஏ-9 பாதையை மூடிவிடலாம். பேச்சுக்களுக்கு வரும் வரை அந்த இயக்கத்தை மீண்டும் தடை செய்ய வேண்டும்.

வடுதலைப் புலிகளின் இயக்கம் மாற்று அரசாங்கத்தை அமைக்கப்போகும் ஒரு அமைப்பல்ல. அதனால்தான் அவர்கள் பொறுப்பற்றவர்களாக செயறபடுகின்றனர்.

அரசாங்கம் கண்ணியமாக செயற்படுமானால் அவர்கள் தமது வன்முறைகளையே தொடருவர். ஒரு படைவீரர் புலிகளால் சிறைபிடிக்கப்படும போது அரசாங்கம் நடந்துகொள்வது போல ஒரு அமைச்சர் சிறை பிடிக்கப்பட்டாலும் நடந்துகொளளுமா? இவ்வாறு முன்னால் சிஹல உறுமயவன் தலைவராய் இருந்து பிரிந்து சென்றவரான தேசிய அமைப்புக்களின ஒன்றியத் தலைவர் எஸ்.எல்.குணசேகர கேள்வி எழுப்பியுள்ளார். (ற-6)

# மனித நேயத்திற்கும் ஜனநாயக அரசியலுக்கும் அடித்த சாவுமணி

## ஜேர்மனிய தமிழர் ஒன்றியம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையானது "மனித நேயத்திற்கும் ஜனநாயக அரசியலுக்கும் அடித்த சாவுமணியாகும்" என்று ஜேர்மனிய தமிழர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அவ் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

அன்புத் தெய்வமாம் ஜேசுநாதரின் பிறப்பை நினைந்து பக்தியோடு வழிபட்டுக் கொண்டிருந்த 'நெஞ்சில்' கொலை வெறியரின் குண்டுகள் 'மனிதத்தை சிதைத்துப்' பாய்ந்த சம்பவம் மட்டக்களப்பு தேவாலயத்தில் கொடூரமாய் நடந்தேறியுள்ளது.

ஸ்ரீலங்கா புலனாய்வுத் துறையின் ஒட்டுப்படைகளின் அதி கொடூர கொலை வெறியின் சதிவேலை, தமிழீழத்தையும் மனித நேயமுள்ளவர்களையும் கொதிப்படையச் செய்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் ஞாயிற்றுககிழமை அதிகாலை தேவாலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரம், ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஒட்டுப்படைகள் மனிதநேயத்திற்கும் ஜனநாயக அரசியலுக்கும் அடித்த சாவுமணியாகும்.

மட்டக்களப்பு செயலகத்தில் வரைபட பணியாளராக தனது பொது வாழ்வை ஆரம்பித்த மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் தினபதி பத்திரிகையின் பகுதிநேர ஊழியராகப் பணியாற்றியதோடு 1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராகவும் பின்பு 1994 ஆம் ஆண்டு வட, கிழக்கு மாகாணத்தில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்று மக்கள் செல்வாக்கு நிறைந்த நேர்மையான நாடாளுமன்ற உறுப்பினராகவும் வாழ்ந்தவர்.

ஆங்கிலத்தில் அதிபுலமை பெற்ற இவர் பொது நல அமைபபு நாடுகளின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் சார்க் நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினராகவும் வாழ்ந்த உயர்ந்த மாமனிதர் இனமானமும் தமிழ்ப்பற்றும் நிறைந்தவர். சிங்கள அரசால் தமிழர்கள தாக்கப்பட்ட போதெல்லாம் நாடாளுமன்றத்தில் உரிமைக்குரல் கொடுத்த தேச உணர்வாளர்.

சிங்கள அரசின் ஒவ்வொரு சதிவலையின் உள்நோக்கங்களையும் வெளியுலகிற்கு துணிந்து வெளியிடட துணிவாளன். கருணாவின் துரோகத்தனம் அம்பலமான நேரம் கருணாவால் ஏற்பட்ட தாக்கங்களை தாஙகி தேச உணர்வு காட்டிய தேசப்பற்றாளன் தமிழீழ மலர்வை நெஞ்சினில் ஏந்தி தேசியத் தலைவரின் இலடசியப் பாதையில் தூய்மையாக செயற்பட்ட பணியாளன்.சமீபத்தில் புங்குடுதீவில் நடந்த சிங்கள இராணுவத்தின் கொடூர கற்பழிப்புப்படுகொலை மற்றும் வட,கிழக்கில் சிங்கள இராணுவம் மக்களை அழிக்கும் செயலை வன்மையாகக் கண்டித்து அலரிமாளிகையில் நடந்த கூட்டத்தில் இராணுவ அதிகாரியின் அருகிலிருந்து துணிவுடன் பேசிய நெஞசுரம் கொண்ட மாமனிதனை தமிழீழ தேசம இழந்து வேதனை கொள்கின்றது.

ஒரு பக்கம் சமாதான முகம் மறுபக்கம் கொலை வெறிமுகம் காட்டும் ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவப் புலனாய்வுத்துறையும் ஒட்டுப்படைகளும் தமிழினத்தை சீற்றமடையச் செய்துள்ளன. சமாதான காலத்தில் சிங்கள அரசால் எமது புத்திஜீவிகள, தளபதிகள், ஊடகவியலாளர்கள், போராளிகள், மக்கள் கொலை செய்யப்படுவது தொடர்கின்றது.

இந்தக் கொடூரக் கொலை வெறியை ஜேர்மனிய தமிழர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சிங்கள அரசே! சமாதானக் கதவை திறநதுள்ளோம். அதனுள் இரத்தத்தை ஊற்றாதீர்கள் அது எமது தேசத்தின் வீர எழுச்சியை பெங்கியெழச் செய்யும்.

சர்வதேசமே! நாம் பொறுமையின் எல்லையை தாண்டி நிற்கின்றோம். கடுமையான அழுத்தத்தை சிங்கள அரசுக்குக் கொடுங்கள் அதுவே சமாதான ஒப்பந்தம் உயிர்ப்புடன் வாழ வழி கோஹும என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சுனாமியால் உயிரிழந்தோருக்கு வடமராட்சி கிழக்கில் நினைவுத்தூபி

## நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது

வடமராட்சி கிழக்கில் சுனாமியால் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக நினைவுத்தூபி ஒன்றை அமைப்பதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது.

நேற்று நண்பகல் 12.30 மணிக்கு வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில், வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக சுனாமி வேலைத் திடடப பணப்பாளர் யூட் தலைமையில இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மங்கள விளக்கினை வடமராட்சி கிழக்கு சமாச மேலாளர் குக்ன், வடமராடசி கிழக்கு கல்விக்கழகப் பொறுப்பாளர் அணணாததுரை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வடக்கு-கிழக்கு வேலைத் திட்டப் பணிப்பாளர் வின்சன், யாழ். மாவட்ட தமிழீழ கடற்படை கட்டளைத் தளபதி மற்றும் வடமராட்சி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தமிழரசன் ஆகியோர் அடிக்கல்லினை நாட்டிவைத்தனர். (ற-23,43)

# ஜனவரிக்கு முன் மருந்து விற்பனை நிலையங்கள் அனுமதிப் பத்திரங்களைப் பெறுவது அவசியம்

## மானிப்பாய் - சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி

(சுதுமலை)

எதிர்வரும்ஜனவரி மாதம் தொடக்கம் மருந்து விற்பனை நிலையங்களில் உரிய வகையில் அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னரே இயங்குவது அவசியம் என மானிப்பாய் - சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சிவகனேசன் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய்- சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் மருந்து விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் வைத்திய அதிகாரி பணிமனையில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இக் கருத்தரங்கிலேயே அவர் இவ் அறிவுறுத்தலை விடுத்தார். அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

'இப்பகுதிகளில் இயங்கும் மருந்து விற்பனை நிலையங்களில் எதிர்வரும் வருடத்தில் அடிக்கடி பரிசோதனை செய்யப்பட்டு அறிக்கைகள் அனுப்பி வைக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே மருந்தகங்களில் உரிய விதிமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும்.

மேலும் மருந்து விற்பனை நிலையத்தின் பெயர் முகவரி தெளிவாக இடப்பட்டிருக்க வேண்டும். அங்கீகாரம் பெற்ற மருந்தாளர் மருந்து விற்பனை நிலையத்தில் முழுநேரமும் கடமை புரிய வேண்டும். சுகாதார போசாக்கு அமைச்சில் மருந்தகம் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் பிறேம் இடப்பட்டு கடையினுள் பொது மக்களிற்கு தெரியுமாறு பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். மருந்தும் பொருட்களின் விலைப்பட்டியல் மருந்தகத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

நோயாளிக்கு டாக்டர்களின் சபார்சுக்கு அமைவாக அவர் எழுதும் மருந்தை வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் மருந்துகள் யாவும் இதற்காகப் பேணப்படும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டியது அவசியம்.

மருந்துப் பொருட்களில் உரிய காலாவதித் திகதி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டியதுடன் சரியான முறையில் பழுதுபடாதவாறு பேணுவது மிகவும் அவசியம்' என்றும் வலியுறுத்தினார்.

மேலும் வயிற்றுளைவு தொடர் காய்சசல் மற்றும் தொற்று நோய்கள் தொடர்பாக சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்றால், நோயாளியின் விபரங்களை தமது பணிமனைக்கு அனுப்பி வைத்தால் அப்பகுதியில் தொடர்ந்தும் அந்நோய் பரவுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் அங்கு வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக் கருத்தரங்கில் சுமார் பதினைந்துக்கும் அதிகமான மருந்து விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். (ந-252)

# முச்சக்கர வண்டி சாரதி சுட்டுக்கொலை

திருகோணமலை கன்னியா பிரதேசத்தில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கூரான ஆயுதத்தால் இவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இவர் தாக்கப்பட்டதாகவும் படுகாயங்களுடன் இவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

31 வயதுடைய முச்சக்கர வண்டி சாரதியொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். (ந-9)

# எல்லை தாண்டி போக வேண்டாமென இராமேஸ்வரம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

(இராமேஸ்வரம்)

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் மோதல் ஆரம்பித்து இருப்பதால் இராமேஸ்வரம் மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைக் கடற்பரப்புக்குள் செல்லக்கூடாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

இலங்கையில் புதியஅரசு பதவியேற்றதில் இருந்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்சி௹கும் இடையில் மோதல் வலுத்து ் ருகிறது. கடந்த இரு நாட்களாக மன்னாரில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 5 கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். கடற்படை ரோந்துக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இலங்கைக் கடல் பகுதியில் கடற்படையில் தீவிர ரோந்துப் பணி மேற்கொண்டுள்ளனர். மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கைப் கடற்படையினர் தாக்கினர். வலைகளை சேதப்படுத்தி மீன்களையும் அபகரித்துக் கொண்டனர்.

இது தொடர்பாக இராமேஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அவசர கூட்டம் நடந்தது. வட்டாச்சியர் மீன்துறை உதவி இயக்குனர் மற்றும் மீனவர் சங்கத் தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் வலுத்து வருவதால், மீன் பிடிக்கச் செல்லும் இராமேஸ்வரம் மீனவர்கள் இந்திய எல்லையைத்தாண்டிச் செல்லக் கூடாது என்று அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மன்னாரில் கைதான 11 பேரும் படுகாயங்களுடன் விடுதலை

(மன்னார்)

மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலையடுத்து கைது செய்யப்பட்ட 11 பேரும் கடந்த சனிக்கிழமை காலை விடுவிக்கப்பட்டனர்.

தாக்குதல் நடைபெற்ற நூறு வீட்டுத் திட்டப் பகுதியில் வைத்த கைது செய்யப்பட்ட இந்த 11 பேரும் மிக மோசமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையிலேயே விடுவிக்கப்பட்டனர்.

மன்னார் ஆயர் வண.பிதா ஜோசப் இராயப்பு ஆண்டகையும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் மன்னாரிலுள்ள கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசியதையடுத்தே இவர்கள் மன்னாரிலுள்ள கடற்படை முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

இதில் நால்வர் படுமோசமான காயங்களுக்கு உள்ளாகி மன்னார் மருத்துவமனையிலும், 7 பேர் பேசாலை மருத்துவமனையிலும் பேசாலை பங்குத் தந்தை வண. பிதா வின்சன் பற்றிக் அடிகளாராலும் மன்னார் நகர் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல் அவர்களாலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந)

# தரவு பதியுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

வனஜீவராசி பாதுகாவல் திணைக்களம் தரவு பதிவுநர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

வண்ணப்பதாரி 18 முதல் 45 வயதிற்குட்பட்டவராகவும் சிங்கள, தமிழ் மொழி அல்லது இலக்கியம், கணிதம், ஆங்கில மொழி அத்துடன் இரசாயனவியல், உயிரியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களில் ஒன்று அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் க.பொ.(சா/த) தரப் பரீட்சையில் சித்தியடைத்திருத்தலும் ( ஒரே தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்) வேண்டும்.

அல்லது கணிதம், சிங்களம் /தமிழ் மொழி, விஞ்ஞானம் அத்துடன் ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் அடங்கலாக 5 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஒரே தடவையில் 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது முதலாம் மொழி, கணிதம், விஞ்ஞானம் அத்துடன் ஆங்கிலமொழி அடங்கலாக ஐந்து பாடங்களில் 'A' அல்லது 'B' தரச் சித்தியுடன் ஆறு பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் (சா /த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்)

மேலும் பிற தகைமைகளாக அங்கீகாக்கப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதங்களுக்கு குறையாமல் கணனி தொடர்பான பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல். அத்துடன் அங்கீகாிக்கப்பட்ட நிறுவனமொன்றின் தரவுப் பதியுநராக ஆறு மாதகாலம் பணியாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

விண்ப்பப்படிவங்கள் அடுத்தமாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், அதிபதி வன்ஜீவராசிகள் பாதுகாவல் திணைக்களம், இல 18,கிரெகரிவீதி, கொழும்பு 07. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (ந-7)

# 9 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஜனவரி மாதம் முதல் இடமாற்றம்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் ஜனவாி மாதம் முதல் ஒன்பது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிற்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பொதுச சுகாதாரப் பரிசோதகர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 16ஆம் திகதி புதிய நிலையங்களில் கடமையைப் பொறுப்பேற்றுத தனக்கு அறிவிக்க வேண்டும் எனவும் பணிப்பாளர் அக்கடிதத்தில் தொிவித்துளளார்.

இதன்படி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமை புரியும் பா.பாலதேவா வேலணைப்பிரிவு பொதுச சுகாதாரப் பரிசோதகராகவும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமை புரியும் எஸ்.ஜெயபாலன் யாழ் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்திற்கும், வே.இராஜேந்திரா ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவுக்கும் வேலணையில் கடமை புரியும் சோ.யோகராஜா பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்கும,

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமை புரியும் என். சச்சிதானந்தன் ஊர்காவற்றுறை பிரிவிற்கும், அராலிப் பிரிவில் கடமை புரியும் எஸ்.அருள்மாறன் உரும்பிராய் பிரிவற்கும், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமை புரியும் எஸ். இராஜதுரை தெல்லிப்பளை சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைக்கும், யாழ். மார்பு நோய் சிகிச்சை நிலையத்தில் கடமை புரியும் க.முருகதாஸ் அராலி பிரிவுக்கும் ஊர்காவற்றுறை பிரிவில் கடமைபுரியும் எஸ்.கார்த்தீபன் சுன்னாகம் பிரிவிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-252)

## சுனாமியால் பாதிப்புற்றோரின்

# வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் ஜெயலங்கா

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கென ஜெயலங்கா என்ற புதிய செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக உள்நாட்டு விவகார அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவாக நிவாரணங்களை வழங்கும் நோக்கத்தில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்ததை நினைவுகூரும் முகமாக நினைவு முத்திரையொன்றும் வெளியிடப்படவுள்ளது.

சுனாமியால் அங்கவீனமானவர்களுக்கு மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபாவை வழங்கவும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு வங்கிக் கணக்குகளை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

# இலங்கை-இந்தியாவுக்கு இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் அவசியம்

## -ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தும் தேவை தற்போது எழுந்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் சிறிவான சிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் போது இது தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த சில வருடங்களாக போர் நிறுத்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் பலத்தையும் செயற்பாடுகளையும் அதிகரித்து வந்துள்ளனர்.

இது தற்போது பெரும் அச்சுறுத்தலாகக் காணப்படுகிறது.

இந்தியாவுக்கான தனது விஜயத்தின் போது இது தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப் போவதாகவும்அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

# கொலையாளிகளை கண்டுபிடிக்க துரித விசாரணை - பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தைக் கொலை செய்தவர்களைக் கைது செய்வதற்கான துரித விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதற்கென விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதுவரை கிடைக்கப் பெற்ற தகவல்களை மையமாகக் கொண்டு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட பல பிரதேசங்களில் இந்தப் பொலிஸ் குழுக்கள் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# சாந்தியடையாத —ஆவிகள்—

இது நோர்வே பத்திரிகை ஒன்றில் வெளியான கட்டுரை

கடந்த வருடம் மார்கழி மாதம் 26ஆம் திகதி தென்னாசியாவில் இடம்பெற்ற அனர்த்தத்தின் காரணமாக பல ஆயிரம் உயிர்களை இயற்கை அனர்த்தம் பறித்தெடுத்தது நீங்கள் அறிந்ததே. இதில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையவில்லை என்பதால இவர்கள் ஆவியாக நடமாடுகின்றார்கள் எனத் தாய்லாந்தில் தெரிவித்துள்ளனர். இதைப் பற்றிய செய்திகள் தாய்லாந்தில் உள்ள ஊடகங்களில் வழமையாகவே மாறி விட்டது. மேலும் இங்கே அநேகமானோர் ஒரு ஆவியையாவது பார்க்கின்றார்கள் எனவும், இறந்தவர்களில் வெளிநாட்டவர்களும் அடங்கியுள்ளதால் ஆவிகள் பல்வேறு மொழிகளில் உரையாடுகின்றது. மற்றும் திடீரென அவை மறைகின்றன எனவும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக தாய்லாந்தில் கடற்கரையோரங்களில் மக்கள் தங்களின் நடமாட்டத்தைத் தவிர்க்கின்றார்கள். மற்றும ஒரு பெரிய வியாபார நிலையத்தின் கீழ் மாடியில் தங்களது வேலைகளில் ஈடுபட்டோர் அந்த இடத்திலேயே இறந்தார்கள். மக்களின் இந்தப் பீதியை அறிந்த வியாபார நிலைய உரிமையாளர் 50 புத்தபிக்குமார்களை அழைத்து தனது வியாபார நிலையத்தில் பூசை செய்துள்ளார்.

தாய்லாந்தில் வாடகைக்கு அமர்த்தும வாகனங்களில் மிக அதிகளவிலானவை ஆட்டோக்களேயாகும். இந்த ஆட்டோக்களில ஆவிகள் தான் பயணம் செய்கின்றன என்று உள்நாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன. ஒரு ஆட்டோ சாரதி தன்னிடம் வெளிநாட்டவர்கள் வாடகைக்கு ஆட்டோவை கேடடார்கள் என்றும், தான் தென் **Phuket** க்கு அண்மையில் உள்ள **Kata** கடற்கரையை நெருங்கும்போது, வாடகைக்குப் பிடித்தவர்களில் இருவரே ஆட்டோவில் இருந்தார்கள் என்றும், மறுகணமே அவர் அங்கிருந்து ஓடியதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஆவிக் கதைகள் தென்னாசியாவில் பாதிக்கப்பட்ட நாடுகளான இந்தோனேசியா, இலங்கைக்கும் பரவியுள்ளது. இலங்கையில் கல்முனைப்பகுதி மக்கள் அந்தப் பிரதேசத்தில் 'உதவி உதவி' எனக் குரல்கள் கேட்பதாக முறைப்பாடு செய்கின்றார்கள் என்று **AP** செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவர்களின் குரல்கள் கடலை நோக்கியதாகவே இருக்கின்றது என பங்குத்தந்தை ஒருவர் கூறியுள்ளார். 'என்னைக் காப்பாற்றுங்கள், நான் சாகப்போகின்றேன்' இவ்வாறு தமிழ் மொழியிலான குரல்கள் கேட்கின்றன எனவும் அவர் மேலும் கூறினார்.

தாய்லாந்தில் அதிகமானோருக்கு இவ்வாறான ஆவிக் கதைகளில் நம்பிக்கையில்லை இருந்தும் இறந்தவர்களுக்காக புத்தபிக்குமார்கள் பூசை செய்யவிருக்கினறார்கள். ஆனால் சீனா, தாய்வான், சிங்கப்பூர், கொங்கொங் போன்ற மற்றைய நாடுகளில் இது உயிர்பெற்றிருக்கின்றது.

மற்றும் இவ்வாறான கதைகளைப் படிப்பறிவு இல்லாதவர்களே நம்புகின்றார்கள் என தாய்லாந்தின் சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். □

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான ஏ.ஆர்.வி தடுப் பூசி மருந்தேற்றப்படவுள்ளது. நாளை மறு தினம முற்பகல் 9.00 முதல் 10.00 மணி வரை பிடாரி அம்மன் கோவிலடியிலும், முற்பகல் 10.30 முதல் 11.30 மணிவரை 4ஆம கட்டை தியாக சீலம் அருகிலும், பிற்பகல் 1.00 முதல் 2.00 மணி வரை முன்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், பிற்பகல் 2.30 மணி முதல் 3.30 மணி வரை நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் அருகிலும் மேற்படி பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு, தடுப்பூசி மருந்தேற்றப்படவுள்ளதாக ஆனைக் கோட்டைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகா அறிவித்துள்ளார். (ற-7)

## பொலிஸ் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திமிலைத்தீவில் நேற்று அதிகாலை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இன்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் எம்.கருணாரத்ன (வயது 42) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இராணுவ விட்டோடிகள் சட்டப்படி விலக 30 வரை காலக்கெடு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள சட்டப்படி விலகுவதற்கான நடவடிக்கைகள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைபெறும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது பனாகொடை இராணுவ முகாமில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டு வருகின்றன.

இதன்படி சட்டப்படி பதவி விலகுவதற்காக வருபவர்கள் தங்களிடமுள்ள இராணுவ அடையாள அட்டை, இராணுவ உபகரணங்கள், தங்களின் பெயரால் இருக்கும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி, தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சின செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்கள் இல்லாத நிலையில் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தும வகையில் கிராமசேவகர்களால் உறுதிப்படுத தப்பட்ட 3 புகைப்படங்களைக் கொண்டு வரவேண்டும் என்றும் அந்த அறிவுறுத்தலில கூறப்பட்டுள்ளது. (ற)

## வன்முறைகளை நிறுத்துமாறு ஆயர் மன்றம் கோரிக்கை

(கொழும்பு)

சகல வன்முறைகளையும் உடனடியாக நிறுத்துமாறு கத்தோலிக்க ஆயர் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் கௌரவமான தீர்வுக்காக முழு நாடும எதிர்பார்த்துள்ள இவ்வேளையில் அதிகரித்துவரும் வன்முறைச சம்பவங்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு பெரும் தடையாக அமைந்துவிடுமென கத்தோலிக்க ஆயர் மனறம விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யேசுகிறிஸ்துநாதர் பிறந்த இத் தினத்தில் வன்முறைகளை நிறுத்துமாறு ஆயுதப படையினர், தமிழீழ விடுதலைப்புலிகள், ஆயுதக் குழுக்கள் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிககப்பட்டுளளது. (அ-9)

## படிப்பக, முன்பள்ளி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகப் படிப்பகக் கட்டடம் 1996ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரால் பாவிக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு திரும்ப ஒப்படைக்கப்படடது. இக்கால எல்லையில் படிப்பகம், முன் பள்ளிக் கட்டடம் முதலியன சேதமடைந்தும் தளபாடங்கள் காணாமல் போயும் உள்ளதால், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை அவற்றை புனரமைப்புச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு 2004ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத திட்ட நிதியிலிருந்து யாழ்.பா.உ. சுரேஷ் பிரேமசசந்திரன ஒதுக்கிய 50,000 ரூபாவில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படடன.

யாழ்.மாவட்டச் செயலர் மற்றும் யாழ்.மாவட்ட திட்டமிடல் பிரிவினர் ஆகியோரின் சிபாரிசினால் சிறுவா பாதுகாப்பு இலங்கை, அரச சார்பற்ற சர்வதேச நிறுவனம் வழங்கிய இரண்டு இலட்ச ரூபா நிதியுதவியுடன் கழக படிப்பகம், முன்பள்ளிக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு 2006ஆம் ஆண்டு தைமாதம் 15ஆம் திகதி திறக்கப்படவுள்ளது. (து)

### இந்திய வம்சாவளி மக்கள்

## இந்தியத் தூதுவராலயம் முன்பாக மறியல் போர் நடத்த முஸ்தீபு

இந்தியத் தூதுவராலயத்தின் முன் பாரிய மறியற் போராட்டம் ஒன்று விரைவில் நடத்தப்படும் என்று இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் ரி.சென்னன் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த இந்திய வம்சாவளி மக்களின் தேவைகள் மற்றும் விருபபுக்கள் ஆகியவற்றினைக் கருத்திற் கொண்டு செயற்படாத இலங்கைக்கான இந்தியத் தூதரகம் மீதுமக்கள் வெறுப்புக்கொண்டுள்ளனர்.

இது சம்பந்தமாக இந்திய வம்வாவளி மக்களின் பலத்த எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக இலங்கையின் இந்தியத் தூதுவராயலத்தின் முன் பாரிய மறியற் போராட்டம ஒன்று விரைவில் நடத்தப்படும் என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் ரி.சென்னன் முன்னணியின பணிமனையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் விடயத்தில் இந்தியத் தூதரகம் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இதனால் இந்தியத் தூதுவராலயம் மீதும், இந்திய அரசாங்கதத்தின் மீதும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். அம் மக்கள் இன்று யாருமற்ற அநாதைகளாக இருந்து வருகின்றனர். அம் மக்களுக்கு குரல் கொடுக்க எவருமில்லை.

இந்திய வம்சாவளி மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பு இலங்கைத தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமல்ல, மேலும பல்வேறு அமைப்புக்களும் மலையகத்தில் உள்ளதென்பதை இந்தியத் தூதுவர் உணர்ந்துகொள்ள வேண்டும். இநதியத் தூதுவர் இலங்கையில் தொழிலாளர் காங்கிரசையைத் தவிர்ந்த ஏனைய இந்திய வம்சாவளி அமைப்புக்களைப் புறக்கணித்து வருகின்றார். இப் புறக்கணிப்பு நீண்டகாலமாகவே இடம்பெற்று வருகின்றது என்றார். (ற)

## வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயம்

ஆனைககோட்டையில் உதயதாரகை சனசமூகத் தலைவர் ந.பகிரதன் (வயது 34) என்பவர் குழு ஒன்றினால் வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இளைஞர்களுக்கு இடையிலான மோதல் ஒன்றினை பிரஸ்தாப நபர் மறுநாள் காலை சமாதானப்படுத்தி தீர்த்து வைத்ததாகவும், பின்னர் அன்றையதினம் மாலை 3.30 மணிக்கு அவ்வழியால் வந்தபோது குழுவொன்று இவரை கத்திகள், தடிகள் சகிதம் தாக்கியதால் இவரின் கை, தோள் மற்றும் வயிற்றுப்பகுதி ஆகியவற்றில் படுகாயங்களுக்குள்ளாகியதுடன, கைவிரல் நான்கும் துண்டாகியதாகவும் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து அக் குழுவின் இளைஞர்கள் அவ்வழியாகச் சென்ற சி.நிறைஞ்சன் (வயது 22) என்ற மற்றொரு இளைஞரையும கையில் கத்தியால் வெட்டியுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ற-39)

## அமீர் அலிக்கு அனுமதி மறுப்பு

அமைச்சர் அமீர் அலிக்கு இந்தியாவில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கீழக்கரைக்குச் செல்வதற்காக அமைச்சர்களான அமீர் அலியும, ரிஷாத் பத்யுதீனும் சென்றனர். திருவனந்தபுரம் விமான நிலையத்தில் சார்க் நாடுகளுக்கான விசாவை உரிய அதிகாரிகளிடம அமீர் அலி எடுத்துக்காட்டினார். ஆனால், அந்த விசா டிசமபர் 21ஆம் திகதியுடன முடிவடைந்துவிடடதால் அமைச்சர் அமீர் அலியை அனுமதிக்க திருவனந்தபுரம் விமான நிலைய அதிகாரிகள் மறுத்துவிட்டனர். அவருடன் சென்ற ரிஷாத் பதியுதீனின் விசா ஆவணங்கள் சரியாக இருந்ததால் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது. (ற)

## தடைசெய்யப்பட்ட 'தெர்மோபரிக்' ஆயுதங்கள் பேசாலைத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதாம்

### —ஆங்கில ஊடகத்துக்கு மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி

சர்வதேச சமூகத்துடனான தமிழீழ விடுதலைப புலிகளின் உறவைச் சிதைக்கும் வகையில் அரசாங்கம் புதிய சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இராணுவத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

புங்குடுதீவு தர்சினியின் பாலியல் படுகொலைக்கு எதிர்வினையாக மன்னாரில் பொங்கியெழும் மக்கள் படையினரால் 13 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை வைத்து புதிய இராஜதந்திர சதித் திட்டத்தை நகர்த்த ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்துள்ளது.

மன்னார் பேசாலைத் தாக்குதலில் உலக அளவில் தடைசெய்யப்பட்ட 'தெர்மோபரிக்' ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக முதல் நிலை தகவல்கள் தெரிவிக்கின்றன என்று மன்னார் பொலிஸ் பொறுப்பதிகாரி சுதத் அசமதல கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரச பகுப்பாய்வாளர் சிறப்பு விசாரணைகளை மேற்கொள்வார் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தக் கதையைச் சோடனை செய்வதற்காக, கைக் குண்டுத்தாக்குதல்களால் மனித உடல்கள் இப்படி சிதையாது என்றும் அனைத்துலக நாடுகள் தடை செய்த தொமோபரிக ரக ஆயுதங்களை இந்தத் தாக்குதலில் பயன்படுத்தினார்கள் என்றும் புதிய விளக்கங்களையும் அவர் அளித்துள்ளார்.

நேர்மைப் பேச்சுக்களில் நம்பிக்கையின்றி, சர்வதேச சமூகத்திடம் தடை செய்யப்பட்ட, ஆயுதங்களை விடுதலைப்புலிகள் பயன்படுத்துகிறார்கள் என்ற புதிய கதையை அவிழ்த்துவிட ஸ்ரீலங்கா அரசாங்கம் தயாராகி வருவதையே இந்தச் செய்திகள் சுட்டிக்காட்டுவதாக கொழும்பு அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## பாதுகாப்புப் படையினரின் எச்சரிக்கை சுவரொட்டிகள்!

(கொழும்புத்துறை)

அரியாலைப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினரின் எச்சரிக்கைச் சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

'பாதுகாப்புப் படையினர் எச்சரிக்கை' என்று குறிப்பிடப்பட்டுள்ள இச் சுவரொட்டிகளில் மாணவர்களையும், அப்பாவிப் பொதுமக்களையும் பலி கொடுக்க எந்த ஒரு சக்தி முயற்சித்தாலும் நாம் அமைதியாக இருக்க மாட்டோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இராணுவத்தினர் கடமையில் ஈடுபடும் இடங்களிலேயே மேற்படி சுவரொட்டிகள ஒட்டப்பட்டுள்ளன அரியாலை தபால் கட்டைச் சந்தி, மாம்பழம் சந்திப் பகுதிகளில் இச் சுவரொட்டிகள் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-51)



# ஆறு

## திரை விமர்சனம்

அடக்க முடியாத ரவுடியாக இருந்தாலும், அமைதியான வாழ்வுக்கு அடி–தடி தீர்வல்ல என்பதை அடித்துச் சொல்லும் படம்.

'நாதன் அன்ட் கோ' என்ற பெயரில் ஊரை மிரட்டும் மிகப்பெரிய தாதா சகோதரர்களுக்கு வலதுகரமாக இருப்பவன் ஆறு என்ற ஆறுமுகம். அடங்காத கொம்பனையும் அடித்து உதைத்து பணியவைக்கும் பலசாலி.

வெட்டு– குத்து– இரத்தம் பார்ப்பது, அவனது தொழில் என்றாலும் 'அனாவசியமாக ஒரு உயிர் போவதற்கு தான் காரணமாக இருக்கக்கூடாது' என்பது அவனது கொள்கை. 'கலாட்டா' முதல் கட்டபஞ்சாயத்து வரை... அரசியல் முதல் அப்பாவிகளை மிரட்டுகிறவர்களை விரட்டுவது வரை... எல்லாமே அவனுக்கு சர்வசாதாரணம்.

சொன்னதை மின்னல் வேகத்தில் திட்டமிட்டு செய்து முடிக்கும் ஆறுவுக்கும், ஆந்திராவை சேர்ந்த ஒரு தாதாவுக்கும் இடையே மோதல் ஏற்படுகிறது. இந்த நிலையில், பிரச்சினையில் சிக்கும் இளம்பெண் ஒருத்திக்காக கட்டபஞ்சாயத்து செய்து பிரச்சினையை தீர்க்கும் ஆறுவின் சாதுர்யத்தை பார்க்கும் மகா என்ற மகாலட்சுமிக்கு ஆறு மீது காதல் ஏற்படுகிறது. அவனும் அவளை விரும்பினாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் இருக்கிறான்.

மந்திரி ஒருவரின் பதவியை காப்பாற்றுவதற்காக 'நாதன் அன்ட் கோ' மூலம் கலவரத்தை தூண்டுகிறார்கள். ஆறு இதற்காக கூலிக்கு ஆட்களை தயார் செய்கிறான். அப்போது தீக்குளிப்பது போல் நடிப்பதற்கு 5பேரை தலா 15 ஆயிரம் ரூபாய் கூலி பேசி அழைத்து வருகிறான் ஆறு. ஆனால் மந்திரியின் பலத்தை காட்டுவதற்காக அவர்களை 'நாதன் அன்ட் கோ' தாதா தந்திரமாக, தீவைத்துக் கொன்றுவிட்டு விபத்து என்று நாடகம் ஆடுகிறான்.

இதற்கிடையே ஆறுவின் காதலி மகாவை ஆந்திரா தாதா கடத்துகிறான். அவளை மீட்டு வரும் அவனுக்கு 'நாதன் அன்ட் கோ' தாதாவின் சதி தெரியவருகிறது. இதை அறிந்த தாதா, ஆறுவைக் கொலை செய்ய ஆந்திரா தாதா மூலம் ஏற்பாடு செய்கிறான். அதில் இருந்து ஆறு மீண்டானா... வலதுகரமாக இருந்த தனது உயிருக்கு விலைபேசிய தாதா சகோதரர்களை ஆறு பழி வாங்கியது எப்படி என்பதற்கு அனல் பறக்க விடை சொல்வது 'ஆறு'.

ரவுடி ஆறுவாக சூர்யா. சொல்லி அடித்திருக்கிறார் நடிப்பில். குப்பத்து கோமான் ஆக வந்து தூள் கிளம்புகிறார். உண்மையான ரவுடியின் நடை, உடை, பாவனையை (ஸ்பெஷல் எபக்ட்) கொடுத்து பிரதிபலிக்க வைக்கிறார். உருட்டும் விழியும், மிரட்டும் வார்த்தையும் அரட்டும் வேகமும் திகைக்க வைக்கின்றன. அப்பாவியாக இருக்கும் சூர்யாவுக்குள் இத்தனை பெரிய ஆர்ப்பாட்டமா... ரசிகர்களை இமை கொட்டாமல் நிமிர்ந்து பார்க்க வைக்கிறார். ஒவ்வொரு அசைவையும் அட்டகாசப்படுத்தியிருக்கிறார்.

தாதா கொடுத்த வேலைகளை மின்னல் வேகத்தில் திட்டமிட்ட சாதுர்யமாக செய்வது சுறுசுறுப்பு. உயிர் குடிக்க வரும் கும்பலையும் ப்பூ என்று ஊதித்தள்ளுவது பரபரப்பு. சண்டைக் காட்சிகளில் சூட்டும் வேகம் விறுவிறுப்பு. திரிஷாவிடம் கோபம் கலந்த காதலில் சிக்கிக்கொண்டு தவிப்பது மாறுபட்ட உணர்ச்சி.

தீக்குளிக்க கூலிக்கு அழைத்துச் சென்றவர்கள் தீயில் கருகி இறந்ததை அறிந்ததும் சூர்யா தவிக்கும் தவிப்பு நடிப்பில் உச்சத்துக்கு அவரைக் கொண்டு போகிறது. ஆந்திரா தாதா 'நாதன் அன்ட் கோ' சகோதரர்கள் என்று ஒவ்வொருவராக குறிவைத்து தூக்குவது பிரமிப்பு. உச்சக்கட்ட சண்டைக் காட்சிகள் அனல் பறக்கும் அற்புத பிரமிப்பு. அட்டகாசப்படுத்துகிறார்.

மகாலட்சுமியாக திரிஷா. சூர்யாவின் காதலியாக வந்து கலக்கியிருக்கிறார். சூர்யாவை காதலிப்பதில் பிடிவாதமாக இருக்கும் திரிஷா சூர்யாவை முத்தமிட்டு விட்டு அடி வாங்குவது பரிதாபம். பொய் சொல்லி செல்போன் 'சிம்கார்ட்' விற்றுவிட்டு சிக்கிக்கொள்வது, ஆந்திரா தாதாவிடம் அகப்பட்டுக்கொள்வது, மருந்து வாங்க வந்து பொலிஸாரின் பார்வையில் பட்டுத் தப்புவது என்று ரசிகர்களின் பார்வையை தன்பக்கம் இழுப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார். கிடைத்த வாய்ப்பை திறமையாக பயன்படுத்தி முத்திரை பதிக்கிறார்.

'சுமோ' வடிவேலுவின் நகைச்சுவை வெடிகள் ஆவேச கதைக்கு 'ரிலாக்ஸ்'. அவ்வப்போது வந்து ஆர்ப்பாட்டம் இல்லாமல் அசத்துகிறார். குப்பத்தில் பெண்களிடமும், ரோட்டில் பொலிஸாரிடமும் மாட்டிக்கொண்டு தவிப்பது ரசிகர்களுக்கு கற்கண்டு. குப்பத்துப் பெண்ணாக வரும் ஐஸ்வர்யா ஆர்ப்பாட்டம் செய்கிறார். ரசிகர்கள் மனதில் டெல்லி கணேஷ் நடிப்பு உருக்கம். அசிஷ் வித்யார்தி கலாபவன் மணி, ஜெயபிரகாஷ் ரெட்டி, ராஜ்கபூர், கிரேன் மனோகரன், நிழல்கள் ரவி, மதன்பாப் 'அண்ணி' மாளவிகா தாரிகா உட்பட எல்லோருமே கதாபாத்திரங்களாக மாறி இருக்கிறார்கள்.

சரண் தயாரிப்பில் ஹரி கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி இருக்கிறார். அரசியல், காவல்துறை, சமூகம், அடாவடித்தனம் அத்தனையையும் வசனத்தால் சாடி இருக்கிறார்.

அடி–தடி–குத்து– இரத்தம் அதிகம் என்றாலும் தேர்ந்தெடுத்த கதைக்கு பொருத்தமான காரணங்களை சொல்லி ஜெட் வேகத்தில் கதையை கொண்டுபோய் மீண்டும் சாதனை படைத்திருக்கிறார். திறமைக்கு சபாஷ் வன்முறையை கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

தேவி ஸ்ரீபிரசாத்தின் இசையில்பாடல்கள் துள்ளல். பின்னணி மிரட்டல் பிரியனின் ஒளிப்பதிவு எல்லோருக்கும் பிரியமானது. அடைமழையில் கட்டுப்படுத்த முடியாமல் பாய்ந்து வரும் காட்டாறு.



'பாசக்கிளிகள்' – மாளவிகா

# சத்யராஜுடன் உமா

சத்யராஜ் ஜோடி நமீதாவை, 'கோவை பிரதர்ஸ்' படத்தில் சிபிராஜின் ஜோடி ஆக்கிவிட்டார்கள். இதே படத்தில் சத்யராஜூடன் ஒரு இளம் நடிகை நடிக்கிறார் .

அவர் தான் உமா. 'உம்மா உம்மம்மா' ஆட்டம் போட்டதால் சத்யராஜ் ரசிகை ஆகிவிட்டாராம் உமா.

# சேரனுடன் சந்தியா



'காதல்' படத்துக்குப் பிறகு சந்தியா இப்போது 'ராம் ஜீவாவுடன் டிஷ்ஷும்' படத்தில் ஜோடி சேர்ந்திருக்கிறார். 'வல்லவன்' படத்தில் சிம்புவுடன் நடிக்கிறார்.


அடுத்து சேரன் படத்தில் நடிக்கும் வாய்ப்பு இவருக்கு கிடைத்திருக்கிறது. படத்தில் பெயர் 'பொக்கிஷம்''. என்ன வேடம் என்பது பற்றி அறிவிப்பு விரைவில் வெளிவரலாம்...

# பெயர் மாற்றம்

ஏ.எம்.ரத்னம் தெலுங்கில் தயாரிக்கும் படம் 'பங்காரம்'. தரணி இயக்கும் இந்தப் படத்தின் நாயகி நிலா. இதில் அவர் தனது பெயரை மாற்றிவிட்டார்.

நிலாவின் உண்மைப் பெயர் மீராசோப்ரா. அந்தப் பெயரிலேயே நடிக்கிறார். எஸ்.ஜே.சூர்யா வைத்த பெயர் மீது என்ன கோபமோ..?

# சிபியுடன் நயன்தாரா



இளம் நடிகர்களுடன் தயங்காமல் நடித்து வரும் நயன்தாரா, அடுத்து செல்வ பாரதி இயக்கும் 'பிரபாகரன்' படத்தில் சிபியின் ஜோடியாக நடிக்கிறார்.

'ஜோர்', 'மண்ணின் மைந்தன்', 'வெற்றி வேல் அன்ட் சக்திவேல்', 'கோவை பிரதர்ஸ்' படங்களில் அப்பா சத்யராஜூடன் நடித்த சிபி அடுத்து நடிக்கப்போகும் 'பிரபாகரன்' படத்திலும் அப்பாவுடன் சேர்ந்தே நடிக்கிறார். ஜோடிதான் புதுசு.

# மீண்டும் சரத் கூட்டணி




சரத்குமாருடன் 'மாகாபிரபு', 'ஏய்', 'சாணக்கியா' படங்களில் இணைந்து பணிபுரிந்தவர் டைரக்டர் வெங்கடேஷ் சரத் வெங்கடேஷ் கூட்டணிக்கு ரசிகர்களிடம் அமோ ஆதரவு இருக்கிறது.

எனவே இருவரும் மீண்டும் இணைய வேண்டும் என்று பட விநியோகஸ்தர்கள் விருப்பம் தெரிவித்தனர். இதையடுத்து புதிய சரத் படத்தை வெங்கடேஷ் இயக்குகிறார். படத்தின் பெயர் 'கதிர்'. ஜனவரியில் படப்பிடிப்பு தொடங்குகிறது. இதற்கிடையே சரத்குமாரின் 100வது படமான 'தலைமகன்' படத்தையும் இவர்தான் இயக்குவார் என்று கோடம்பாக்க வட்டாரம் கூறுகிறது.

குஸ்தி ✱ பிரபு - மான்யா



# புங்குடுதீவு படுகொலையை கண்டித்து கனடாவில் கண்டனப் பொதுக்கூட்டம்







(ரொறன்ரோ)

புங்குடுதீவு மண்ணில் மிலேச் சத்தனமான முறையில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் இளையதம்பி தர்சினி என்ற யுவதி பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படடதைக் கண்டித்து கனடாவின் ஸ்காபுரோ நகரில் உள்ள கனடா கந்தசாமி கோவில் மண்டபத்தில் நேற்று முன்தினம் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

காலம் காலமாக தமிழீழ மண்ணிலே இராணுவத்தினரின் கோரப்பசிக்கு இரையாக்கப்பட்டு படுகொலை செய்யப்படும் பெண்களின் வரிசையிலே இப் பெண்ணும் அடங்கியுள்ளார்.

இவ்வாறான முறையிலே நடைபெறுகின்ற படுகொலைகளை உலகிற்கு தெரியப்படுத்தும் முகமாக உலக மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் கனேடிய அரசிற்கும் அனைவரும் ஒருங்கிணைந்து முறையிடும் முகமாகவும் நடைபெற்ற இக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் பொதுமக்களும் ஊடகவியலாளர்களும் மனித உரிமையை மதிக்கும் அனைவரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து மக்களும் அதனைக் கண்டித்து யாவருடைய கையெழுத்தும் அடங்கிய மகஜர் இந்திய, கனடா அரசாங்கத்திற்கும் இன்னும் பல மனிதநேய அமைப்புக்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்திற்கான வணக்க நிகழ்வும் நடைபெற்றது. (ற)

## மஹிந்தவுடன் உயர்மட்டக்குழு இன்று இந்தியாவிற்கு பயணம்

(கொழும்பு)

இந்தியப் பயணம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜப்க்ஷ தலைமையிலான குழு இன்று செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, ரோஹித போகல்லாகம, வடிவேல் சுரேஸ், ஏ.எச்.எம்.பௌசி, பேரியல் அஷரப், ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த உதய பிரபாத் கம்மன்வில ஆகியோரும் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

புதுடில்லி செல்லும் இக்குழுவினர் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஆகியோரை சந்திக்கவுள்ளனர்.

புதுடில்லி சந்திப்புக்களை முடித்துக் கொண்டு கேரளாவின் தலைநகரான கொச்சி செல்லும் இக்குழுவினர் அங்கு இலங்கையில் முதலீடு செய்யும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் சென்னையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை மஹிந்த குழுவினர் சந்திக்கவுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இந்தியாவில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினருடன் இணைந்து கொள்வார் என்று கூறப்படுகிறது. (ற)

## விமானப்படையினர் மீது தாக்குதல்

(திருகோணமலை)

ஸ்ரீலங்கா விமானப் படையினரை ஏற்றிச் சென்ற வாகனம் மீது திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை இரவு 6 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மொரவெவ - திருகோணமலை வதியிலிருந்து 165 கிலோ மீற்றர் தொலைவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மொரவெவ விமானப்படை முகாமுககு படையினரை இந்த வாகனம் ஏற்றிச் சென்ற போது தாக்குதல் நடந்துள்ளது.

சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)



**திருகோணமலை மாணவி மயூரணி மதுரையில் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 24 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட திருகோணமலை மாணவன் பாலபிரசன்னா கடந்த வெள்ளிக்கிழமை மேல் முறையீட்டில் மதுரை உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார். மதுரை மத்திய சிறையிலிருந்து (கையில் பையுடன்) வெளிவரும் பாலபிரசன்னா.**

## 'நெஞ்சில் வாழும் பூக்கள்' இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு





(கிளிநொச்சி)

ஆழிப்பேரலையின் முதலாம் ஆண்டு நினைவலையில் நாட்டுப் பற்றாளர் திருமதி ஜோர்ச் பிலோமினாம்மாவும் ஏனைய அனைத்து உறவுகள் நினைவாகவும் 'நெஞ்சில் வாழும் பூக்கள்' இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் காந்தரூபன் அறிவுச் சோலையில் இடம் பெற்றது.

அறிவுச் சோலைப் பொறுப்பாளர் புவியரசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றி வைத்து தொடர்ந்து நினைவுரையினையும் ஆற்றினர்.

இறுவட்டினை அதற்கு இசை வழங்கிய பிரியதீபன் வெளியிட்டு வைக்க கேணல் சூசை பெற்றுக் கொண்டார்.

இறுவட்டிற்கான மதிப்புரையினை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார்.

நிகழ்வில் சிறப்புரையினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்தினார். (ற)







**நத்தார் தினத்தன்று அதிகாலை ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.**

**சம்பவம் இடம்பெற்ற இடத்தையும், நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்துவதையும், இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது படுகாயமடைந்த ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியின் பாரியார் சுகுணத்திடம் வைத்தியசாலையில் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.**

# 3 கடற்படை வீரர்களை தேடும் பணி தொடரும்

## -கடற்படை தலைமை அலுவலகம்

(மன்னார்)

மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில் தாக்குதல் சம்பவம் ஒன்றின் போது காணாமல் போனதாகக் கருதப்படும் மூன்று கடற்படைவீரர்களையும்தேடும்பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடற்படைத் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் 3 கடற்படை வீரர்களும் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா என்பது குறித்து தகவல் எதுவும் இது வரை வெளியாகவில்லை.

கடற்படைவீரர்கள் மூவரும் எந்தவிதத்திலும் உயிரிழந்திருந்தாலும் அதனை உறுதிப்படுத்தும் வரை தேடும் பணிகள் தொடர்ந்தும்மேற்கொள்ளப்படும் எனகடற்படைத் தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது. (ற-8)

# ஜோசப் எம்.பி படுகொலை குறித்து உரிய விசாரணை நடத்தப்படும்

## -ஊடகத்துறை அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையின் சிரேஷ்ட அரசியல் வாதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென்று தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினரது கொலைக்கு அரசாங்கத்தின் சார்பாக எமது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இவர் தேசியப் பிரச்சினைகளை சமாதானப் பேச்சுவார்த்தையின் மூலமே தீர்க்க வேண்டும் என்ற கொள்கையை உறுதியாக நம்பி செயற்பட்டவர்.

இவரது கொலை தொடர்பாக பூரண விசாரணையொன்றை நடத்தி அதன் விபரத்தை வெளியிடும்படி பாதுகாப்பு அமைச்சை வேண்டியுள்ளோம். பாதுகாப்பு அமைச்சரின் விசாரணை அறிக்கைகள் கிடைக்கப்பெற்றதும் யார் இந்தக் கொலைக்கு பின்னணியாக இருந்தார்கள் என்ற விபரம் வெளியிடப்படும்.

இந்தக் கொலையைச் செய்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ற-9)

# நாட்டின் முன்னேற்றத்திற்கு அனுகூலமான செயற்றிட்டம்

(கொழும்பு)

நாட்டின் முன்னேற்றத்திற்கு அனுகூலமான விசேட செயற்றிட்டம் ஒன்றை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கவுள்ளதாக தொழில் உறவுகள் , வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் செயற்திறன் வேகவிகிதம் 85 ஆக இருக்கும் நிலையில் இலங்கையில் செயற்திறன் வேக விகிதம் 45 முதல் 50ற்கு இடைப்பட்ட அளவிலேயே காணப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

புதிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வர செயற்திறன் அபிவிருத்திச் செயலகம் ஒன்றைத் திறந்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

வீட்டுத்தோட்ட அபிவிருத்தி , தொழிற்சாலைகளின் அபிவிருத்தி மற்றும் பாடசாலைகளை முன்னேற்றம் அடையச் செய்தல், உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், அலுவலக நடவடிக்கைகளை செயற்திறன் மிக்கதாக மாற்றி அமைத்தல் போன்றவை இந்தத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப் படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

# அரசாங்கத்தின் அனுமதியுடனேயே விடுதலைப்புலிகளுடன் சந்திப்பு

## -ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சந்திப்பு அரசாங்கத்தின் அனுமதியுடனேயே நடைபெற்றதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான நடைமுறைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைவருடனும் பேசவிருப்பதாகவும் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது. கிளிநொச்சியில் கடந்த சனிக்கிழமை இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. இணைத்தலைமை நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (ற-8)

# நடிகர் திலகம்

மீள்பார்வை

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின் சுயசரிதை




1

### சமர்ப்பணம்

அறுபது ஆண்டு காலம் ஒரு நடிகர் என்ற முறையில், தமிழ் திரையுலகிற்குத் தொண்டாற்றி, பல கோடி மக்களின் இதயத்திலே, நிரந்தரமான ஒரு இடத்தைப் பெற்று, புகழோடு வாழ்ந்து, பெரும் புகழோடு மறைந்த , எங்கள் தந்தையார் *நடிகர் திலகம், செவாலியே, டாக்டர் .சிவாஜிகணேசன்* அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய, இறையருளால் அவரது *சுயசரிதை* நூலை உருவாக்கி யுள்ளோம்.

முப்பது ஆண்டு காலத்திற்கு மேல் எங்கள் தந்தையாரோடு நெருங்கிப் பழகி, அவ்ரது அன்புக்கும், நட்புக்கும் பாத்திரமாகி எங்கள் குடும்பத்தில் ஒருவருமாக இருப்பவர் *டாக்டர். டி.எஸ். நாராயணஸ்வாமி* அவர்கள்.


டி.எஸ். நாராயணஸ்சுவாமி

*சென்னைத் தொலைக்காட்சி* நிலையத்தில் பல ஆண்டுகள் தயாரிப்பாளராகப் பணிபுரிந்து, அதன் பின்பு *யுனிசெப்* என்னும் *உலகக் குழந்தைகள் ஸ்தாபனத்தில்* தகவல் தொடர்பு அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர் அவர். சமயம், இலக்கியம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் *ஆராய்ச்சியாளர்*. சிறந்த *தமிழ் எழுத்தாளர்*.

நடிகர் திலகம் *டாக்டர் .சிவாஜி கணேசன்* அவர்களின் வாழ்க்கை வரலாறு பற் றிப் பல வருட காலமாக ஆராய்ச்சி செய்து, குறிப்புகள் எடுத்துள்ளார். 1950 முதல் பத்திரி கைகள் மற்றும் எலக்ட்ரானிக் மீடியா மூலம் நடிகர் திலகம் அவர்களைப் பற்றி வெளி வந்த செய்திகளையும் புகைப்படங்களையும் சேகரித்து, தொகுத்து வைத்திருப் ப்வர் . 1997ஆம் ஆண்டு முதல் நான்கு வருட காலம் எங்கள் தந்தையாரோடு உரையாடி, அவ ரது வாழ்க்கை வரலாற்றின் முக்கிய சம்பவங்களையெல்லாம் ஒலிப்பதிவு செய்து அந்த தகவல்களை தொகுத்து இந்த *சுயசரிதை* நூலை “ *கேள்வி பதில்* ” வடிவில் உரு வாக்கியுள்ளார் அவர்.

தன் சுயசரிதையை சொல்லும் போது, நடிகர் திலகம் குறிப்பிட்ட ஒரு முக்கிய கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறோம்.

*“என்னுடைய வாழ்க்கை ஒரு பரந்த கடல் போல. என்னுடைய கலையுலக வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும், நான் எத்தனையோ கலைஞர்களையும் பெரியோர்களையும் சந்தித்திருக்கிறேன். அவர்கள் அனைவரையும் வரிசைப்படுத்தி , இந்த “சுயசரிதை” யில் குறிப்பிடுவது கடினம். எனக்கு பாதிப்பு ஏற்படுத்திய சம்பவங்களையும், என்னைப் பாதித்து வியக்க வைத்த சில மறக்கமுடியாத கலைஞர்களையும் ,பெரியோர்களையும் மட்டுமே, நினைவில் கொண்டு குறிப்பிட்டுள்ளேன். இதில் விட்டுப் போனவர்கள் எல்லோரும் என் நினைவில் வராவிட்டாலும், என் இதயத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருப்பவர்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.*

-சிவாஜிகணேசன்

நடிகர் திலகம் அவர்கள், தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை, நாடக, திரைப் பட மற்றும் அரசியல் வாழ்க்கை ஆகியவற்றில் கிடைத்த அனுபவங்களை நினைவு கூர்ந் து, மனந் திறந்து, உணர்ச்சி பூர்வமாக பேசியிருக்கும் விஷயங்கள், இந்த நூலில் இடம் பெறுகின்றன.

நடிப்பின் இலக்கணத்தையும், நடிகர்கள் நல் வாழ்வுக்கான ஆலோசனைகளையும், தன் சுயசரிதையில் சில இடங்களில் எங்கள் தந்தை யார் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு கதை போல அவர் கூறிய அவருடைய வாழ்க்கை யின் சம்ப வங்களின் தொகுப்பு தான் இந்த நூல். எங்கள் தந்தையார் உயிருடன் இருக்கும் போதே, அவரது சுயசரிதை நூலை கையாலேயே வெளி யிடவேண்டும் என்று விரும்பினோம் .அந்தப் பாக்கியம் எங்களுக்கு இல்லாமல் போய்விட்டது.

அவரது வாழ்க்கைத் துணைவியாக வாழ்நாள் முழுவதும் அவருடன் இருந்து, தொண்டு செய்தவர் எங்கள் அன்புக்குரிய தாயார் *கமலாம்மாள்* அவர்கள். எங்கள் தந்தையாரது கலையுலக வாழ்க்கையின் வெற்றிக்கு பக்கபலமாக நின்று இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு ஒரு பொறுப்பான குடும்பத் தலைவியாக, எங்கள் எல்லோரையும் ஆளாக்கி, கூட்டுக்குடும்பத்தில் இருந்த அனைவரையும் அரவணைத்து அன்பு செலுத்தி எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குகின்ற எங்களது தாயார் *கமலாம்மாள்* அவர்களுக்கு, இந்த *சுயசரிசை நூலை சமர்ப்பணம்* செய்கின்றோம்.

சமூக, சமுதாயப் பணிகளுக்காக வும், குறிப்பாக ஏழைக் குழந்தைகளின் கல்விப்பணிகளுக்காகவும் சேவை செய் வதற்காக,எங்கள்தந்தையாரால் உருவாக் கப்பட்ட ஒரு தார்மீக ஸ்தாப னம், *சிவாஜி பிரபு சாரிட்டீஸ் டிரஸ்ட்.* இந்த டிரஸ்ட் மூலம் இந் நூலை வெளியிட்டு, இத னால் கிடைக்கும் நிதியை, கல்விப் பணிக்கு செலவிட முடிவு செய் துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந் நூலை வெளியிட பல்வேறு வழிகளில் எங்களுக்கு பேரு தவி செய்த தொகுப்பாசிரியர் *டாக்டர். டி.எஸ்.நாராயணஸ்வாமி* அவர்களுக்கு முதலில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவ ருக்கு உறுதுணையாக இருந்த *ஆசிரியர் குழுவின்ருக்கும்*, அரிய புகைப் படங்கள் தந்து உதவிய *புகைப் படக்கலைஞர்களுக்கும்*, நூலை மிகச் சிறப்பான முறையில் அச்சிட்டுத் தந்த *என்.பி. டி. ஆ.:ப்செட்* நிறுவனத்தினருக்கும் எங்களது மன மார்ந்த நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறோம். நடிகர் திலகத்தின் வாழ்க்க வரலாறு பற்றிய குறிப்புக்கள் தந்து உதவிய *வெரி யோர்களுக்கும் சிவாஜி ரசிகர்க்ளுக்கும்*, நூல் மக்களை சென்றடைய பேருதவி செய்து வருகின்ற *பத்திரிகை, மீடியாத் துறையினருக்கும்* எங்கள் நன்றி.


சிவாஜி-கமலாம்மாள்


ராம்குமார் கமலாம்மாள் சிவாஜி, பிரபு

நடிகர் திலகத்தின் வாழ்க்கையைப் பரிபூரணமாக பல்வேறு பரிமாணங்களில் ஆராய்ந்து, தொடர்ந்து பல நூல்களாக வழங்குவதற்கான முயற்சியையும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த சுயசரிதை நூலை படிக்கின்ற வாசகர்கள் எல்லோர் மனதிலும், நடிகர் திலகத்தின் நினைவுகள் என்றும் நிலைத்திருக்க, எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்!

G.ராம்குமார்: G.பிரபு: கிரி சண்முகம்
சிவாஜி பிரபு சாரிட்டீஸ் டிரஸ்ட், சென்னை

(தொடரும்)

# பாகிஸ்தான் - ஜம்மு-காஷ்மீரில் மீண்டும் பயங்கர நிலநடுக்கம்

## மக்கள் அலறியடித்து ஓட்டம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் மற்றும் ஜம்மு- காஷ்மீர் பகுதியில் நேற்று முன் தினம் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள்.

கடந்த அக்டோபர் மாதம் 8ஆம் திகதி பாக்.ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியான முஷாபராபாத்தை மையமாக கொண்டு ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் பாகிஸ்தானில் 80ஆயிரம்பேர் உயிரிழந்தனர். மேலும் இலட்சக்கணக்கான மக்கள் வீடுகளையும் உடைமைகளையும் இழந்து தவிக்கின்றனர்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மற்றும் ஜம்மு- காஷ்மீர் மாநிலங்களில் நிவா ரணப் பணிகள் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வீடுகளை இழந்த மக்கள் தற்காலிக குடிசைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் பூகம்பத்தில் தப்பிய மக்கள் தற்போதுதான் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளனர். அக்டோபர் 8பூகம்பத்திற்கு பின்னர் இதுவரை பாகிஸ்தான் மட்டும் ஜம்மு-காஷ்மீர் பகுதியில் சிறியதும், பெரியதுமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட நிலநடுக்கங்கள் ஏற்பட்டுவிட்டன.

இந்நிலையில் நேற்று முன்தினம் பகல் 1.02 மணியளவில் பாகிஸ்தான் மான்செரா பகுதியை மையமாகக் கொண்டு ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 5.2 ஆக பதிவான இந்த நிலநடுக்கத்தால் பாகிஸ்தானின், இஸ்லாமாபாத, பெஷாவர், மான்செரா, பாலகோட் மற்றும் அப்போடாபாத் ஆகிய பகுதிகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இந்தப் பகுதிகளில் உள்ள கட்டடங்களில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளது. கதவுகள், ஜன்னல்கள் போன்றவையும் பயங்கரமாக அதிர்ந்தன. இதனால் மக்கள் அலறியடித்துக்கொண்டு வீடுகளை விட்டு வெளியே ஓடினார்கள். இந்த நிலநடுக்கம் ஏற்பட்டு சுமார் 4 மணி நேர இடைவெளியில் அடுத்தடுத்து பல நில அதிர்வுகள் ஏற்பட்டன.

நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் மலைப்பகுதிகளில ஏராளமான இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. சாலைகளில் நில்ச்சரிவு ஏற்பட்டுள்ளதால மலையோரப்பகுதிகளில் பஸ் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இதே போல ஜம்மு -காஷ்மீர் பகுதியிலும் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் பீதியில் வீடுகளைவிட்டு வெளியேறி பரந்த வெளியில் தஞ்சமடைந்துள்ளனர். (ற)

ஜப்பானில் பரிதாபம்

# அதிவேக ரயில் தடம்புரண்டது 4பேர் பலி; 33பேர் படுகாயம்

(டோக்கியோ)

ஜப்பானில் இப்போது கடும்குளிர் நிலவுகிறது. வீதிகளில் மூடுபனி காரணமாக சாலை போக்குவரத்து பனி மூட்டம் காரணமாக ரயில், விமானப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வடக்கு ஜப்பானில் டோக்கியோ நகருக்கு வடக்கே 300கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள யாமகதா நகரில் ஒரு அதிவேக ரயில் சென்றுகொண்டிருந்தது. கடுமையான பனிப் பொழிவு இருந்தது. பலத்த காற்றும் வீசியது. தண்டவாளம் தெரியாத அளவுக்கு பனி மழை பொழிந்தது.

அங்குள்ள ஒரு பாலத்தை தாண்டி ரயில்சென்ற போது திடீரென்று ரயில் தடம் புரண்டது. 6 பெட்டிகள் தடம்புரண்டன. தண்டவாளத்தை விட்டு விலகிய ரயில அருகில் உள்ள பன்றிப் பண்ணை கட்டடம் மீது மோதியது. இதில் அந்த கட்டடம் இடிந்து விழுந்தது.

ரயில் தடம்புரண்டதில் அதில் இருந்த பயணிகளில் 4பேர் உடல் நசுங்கி பலியானார்கள். 33பேர் படுகாயம் அடைந்தனர். மேலும் சில உடல்கள் கவிழ்ந்த ரயில் பெட்டிகளுக்குள் கிடக்கலாம் என்று தெரியவருகிறது.

ஜப்பானின் வடக்குப் பகுதியில் ஏற்கனவே கடும் குளிா மற்றும் பனிப் பாறைகள் சரிந்துவிழுந்ததில் 6பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (ற)

# 3 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியது ரஷ்யா

இராணுவம்உட்பட பல துறைகளுக்கு பயன்படும் மூன்று அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக்கோள்களை ரஷ்யா நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

கடந்த 1980-ல்இராணுவம் அரசுத்துறை உட்பட பலதுறைகளுக்குப் பயன்படும் அதிநவீன தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவ ரஷ்யா திட்டமிட்டது. சோவியத் யூனியன் உடைந்ததால் நிதி நெருக்கடியால் இத்திட்டம் நிறுத்திவைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி செயற்கைக் கோள்களை விணணில் ஏவ ரஷ்யா தீவிரமாக முயற்சித்து வந்தது.

இந்திய நேரடிப்படி நேற்று முன்தினம் காலை 10.37மணியளவில் கஜகஸ்தானில் உள்ள பைக்கானுர் ஏவுதளத்திலிருந்து மூன்று செயற்கைக்கோள்களும் புரோட்டான்-கே ராக்கெட் மூலம விண்ணில் செலுத்தப்பட்டன. பகல் 2.09 மணிக்கு வெற்றிகரமாக விண்வெளியில் செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தப்பட்டன. இந்த செயற்கைக்கோள்கள் ஏழு ஆண்டுகள் பூமியின் நீள் வட்டப் பாதையில் சுற்றி பல்வேறு தகவல்களை பூமிக்கு அனுப்பும் செயற்கைக் கோள்களிலிருந்து கிடைக்கும் தகவல்களை இந்தியாவும், ரஷ்யாவும் பங்கிட்டுக் கொள்ளும் (ற)

## 50வருடங்களுக்குப் பின்

# அமெ.இல் பெண்ணுக்கு தூக்குத் தண்டனை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 50வருடங்களுக்கு பிறகு ஒரு பெண்ணுக்கு அண்மையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அஞ்சலாயாண்சன் என்ற பெண்ணுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை அமெரிக்கன் பெடரல்கோர்ட் அண்மையில் நிறைவேற்றியது.

5பேர்களை கொலைசெய்த வழங்கில் போதை மருந்து வியாபாரியான டஸ்டின் என்பவருடன் சேர்ந்து அஞ்சலாவுக்கும் ஜில்லா மார்க் பென்னட்தூக்கு தண்டனையை 1993இல் வழங்கி இருந்தார். தன்னைப்பற்றிய உண்மைகளை தெரிவித்து விடுவார்களோ என பயந்து டஸ்டின் 5பேர்களை கொன்றுள்ளார். இதற்கு அஞ்சலா துணை இருந்தாராம். இதற்குதான் அஞ்சலாவுக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் இரண்டு குழந்தைகளின் தாயும் கூட. அமெரிக்காவில் இதற்கு முன்பு கடைசியாக 1953ஆம் ஆண்டில் தான் ஒரு பெண்ணுக்கு தூக்குத்தண்டனை வதிக்கப்பட்டுள்ளது. அப்போது கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட போணிபிரவுன் என்ற பெண்ணின் மரண தண்டனை ஒரு கேஸ்சேம்பரில் அடைத்து கேஸ் திறந்துவிட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அதற்கு பிறகு இப்போதுதான் ஒரு பெண்ணுக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுகிறது. (ற)

# வழிபாட்டுத் தலத்தில் இடம்பெற்ற மிலேச்சத்தனத்தை கண்டிக்கிறோம்

## அனைத்து பள்ளிவாசல்களின் சம்மேளனம்

(அம்பாறை)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் மூத்த் ஊடகவியலாளருமான யோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை குறித்து அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் அதிர்ச்சியும், கவலையும் வெளியிட்டுள்ளது.

சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்மேளனத்தின் அவசர நிர்வாகக்குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பாக கவனத்திற் கொள்ளப்பட்டு இது விடயத்தில் அதிர்ச்சியும் கவலையும் வெளியிடப்பட்டது.

சம்மேளனத் தலைவர் மௌலவி எஸ். எல்.எம்.ஹனிபா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தேவாலயத்தில் அதிகாலை வணக்க வழிபாடுகளின் போது சுட்டுக்கொல்லப்பட்ட செய்தியறிந்து நாம் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

வரலாற்றில் யுத்தசூழலிலும் கூட அபயமளிக்கப்பட்ட இடமான வழிபாட்டுத் தலங்களில் இவ்வாறான மிலேச்சம் நிறைந்த சம்பவங்கள் நடைபெறுவது ஏவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும் வன்மையாகக் கண்டிக்கப்படத் தக்கதுமாகும்.

இந்த ஈனச் செயலை எவர் செய்தாலும் எதற்காகச் செய்தாலும் மனிதநேயம கொண்ட அனைவராலும் இவற்றை ஜீரணிக்க முடியாது. கடந்தமாதம் அக்கரைப்பற்று ஜும்மா பெரியபள்ளி வாசலிலும் தற்போது மட்டக்களப்பு கிறிஸ்தவ தேவாலயத்திலும் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஈனச் செயல்கள் இந்த பிரதேசங்களின் சாபக்கேடான நிலவரத்தை படம் பிடித்துக்காட்டி நிற்கின்றது.

இறந்த பாராளுமன்ற உறுப்பினரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேவேளை மனிதநேயம் கொண்ட அனைவரும் தம் துக்கத்தைக்கலைத்து இறை இல்லங்களில் வணக்கம் புரியும் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதத்தையும் ஒழுங்குகளையும் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## தொடர்புகொள்க

(யாழ்ப்பாணம்)

பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இலவசத் தொழிற்பயிற்சி நெறிக்கு பதிவுசெய்து கொண்ட சகல மாணவர்களையும் எதிர் வரும 2ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு பதிவாளர் கேட்டுள்ளாா.

மேலும், இப்பயிற்சி நெறிகள் எதிர் வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-132,133)

# ஆழிப்பேரலை அனர்த்த ஓராண்டு நினைவு நிகழ்வுகள்

(துன்னாலை)

வடமராட்சி பகுதியில் கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி பெரும் பாதிப்பினை ஏற்படுத்திய சுனாமி கடல் அனாத்தத்தின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு வடமராட்சியில் சகல பகுதிகளிலும் இடம்பெற்றது.

பருத்தித்துறை முனைப்பகுதியிலும் கொட்டடிப் பகுதியிலும் விசேட நிகழ்வாக 200பேர் இரத்ததானம் வழங்கினர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவினர் வருகைதந்து இரத்தம் பெற்றுக்கொண்டனர். வல்வெட்டித்துறை ஊரணி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் மயிலேறும்பெருமாள் தலைமையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதேவேளை, சுனாமியால் வீடுகளை இழந்த மக்களுக்கு தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட பருத்தித்துறை கற்கோவளப்பகுதியில் 50 வீடுகளும் தும்பளையில் 25வீடுகளும் இன்பருட்டிப்பகுதியில் 35வீடுகளும் கையளிக்கப்பட்டன.

இதேவேளை இறந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக பருத்தித்துறை சென்தோமஸ் தேவாலயக முன்றலில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கூ.ச.சமாச முகாமையாளர் சூரியகுமார தலைமையில் இந்து, கிறிஸ்தவ மதகுருமார்களின் ஆசியுரையுடன் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் சர்வோதய அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.[illegible] சிவசுப்பிரமணியம் என்போர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். சுமார் 500நினைவுச் சுடர்கள் ஆலய முன்றலில் ஏற்றப்பட்டன. அனர்த்தம் ஏற்படுத்திய கடலிலும் கட்டுமரத்தில் பெரியதோர் சுடர் ஏற்றப்பட்டு சுடரினை தேவாலய முகாமைக்குரு அருட்தந்தை பயஸ்இருதயதாஸ் ஏற்றினார்.

தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. பரு.பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் சமய நிகழ்வுகளும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் இடம்பெற்று பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதேபோல் சர்வோதய அமைச்சினால் சுனாமியின் போது தாய் தந்தையை இழந்த 10குழந்தைகளுக்கு ஒருதொகைப் பணம் வங்கியில் இடப்பட்டு புத்தகக் கையளிப்பு ஒன்றும் இடம்பெற்றது.

சுனாமியால் பாதிப்புக்குள்ளான பருத்தித்துறை கரையோரப் பகுதிகளில் ஒலிபெருக்கிகளில் சோக கீதம் இசைக்கப்பட்டிருந்தது. வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனைப் பகுதிகளிலும் இறந்த மக்களில் நினைவாக ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் இடம்பெற்றன. (த.101)

# யாழ்ப்பாணத்தில் ஊடக சுதந்திரத்திற்கு ஆபத்து

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் தற்போது ஊடக சுதந்திரத்திற்கும் பலத்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம் பெற்றுள்ள ஊடகவியலாளர்கள் தாக்குதலகள், பத்திரிகை அலுவலகங்கள் மீது சோதனை நடத்தப்படுதல், அண்மையில் யாழ்பபாணத்தில் பத்திரிகை விநியோகத்தர் ஒருவர் பத்திரிகை அலுவலகம் ஒன்றின் முன்பாக வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்களை கோடிட்டுக்காட்டியுள்ள பத்திரிகையாளர் சம்மேளனம் இந்தச் சம்பவங்களானது யாழ்ப்பாணத்தில் ஊடக சுதந்திரத்தையும், கருத்துச் சுதந்திரத்தையும் முற்றாக அடக்கும் ஆரம்பம் என்றும் இதனால் பெரும் கவலை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (ற)

முக்கியத்துவம் பொருந்திய ஓர் உயரத்தை அடைந்து விடுவது எளிதுதான். ஆனால் அந்த உயர் நிலைய்ய இழந்து விடமால் காப்பாற்றுவது மிகக் கடினம்.

-ராஜாஜி

# வலம்புரி

## மகிந்தவின் ஆட்சியில் மீண்டும் இனப் படுகொலை

ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மகிந்த ராஜபக்ஷ, தனது வெற்றியால் பண்டார நாயக்கவின் ஆட்சி நாட்டில் மீண்டும் வந்துள்ளதாக கூறியிருந்தார்.

ஜனாதிபதி மகிந்த கூறிய பண்டார நாயக்க வின் ஆட்சி என்பது எதைக் குறிக்கின்றது என்ற விடயம் ஆராயப்பட வேண்டியது.

தனிச்சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம் பண்டார நாயக்க இனவாதத்துக்கு தூப மிட்டார் எனலாம்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஜே.ஆர்.ஜெய வர்த்தன எதிர்க்கிறார் என்பதற்காக சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக கொண்டு வருவ தென்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடி யாதது.

இவ்வாறு தனிச் சிங்கள சட்டத்தில் கொண்டு வந்து தமிழ் மக்களை -தமிழ் மொழியை இரண்டாம் தரத்துக்கு தள்ளிய பண்டார நாயக்கவின் ஆட்சி மீண்டும் வந்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த கூறுகிறாரெனில் அதற்குள் இனவாத உக்கிரம் இருப்பது தெரிகிறது அல்லவா?

பண்டார நாயக்கவின் ஆட்சியை ஏற்படுத் துவதன் ஊடாக தமிழ் மக்களை புறந்தள்ளுவதே ஜனாதிபதி மகிந்தவின் நோக்கம் என்பது இப் போது உறுதியாகி விட்டது.

தமிழர் தாயகம் எங்கிலும் படையினர் குவிக் கப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பங் கம் விளைவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பர ராஜசிங்கம், தேவாலயத்துக்குள் வைத்துச் சுட் டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இந்த நாட்டில் இருக்கக் கூடிய பாதுகாப்பு எப்படி இருக்கின்றது? தேவாலயத்துக்குள் புகுந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை சுட்டுக் கொல்லும் மிக மோசமான கலாசாரம் சிங்கள ஆட்சியாளர்களின் படையல்லவா?

தமிழ் மக்களுக்கிடையேயான ஒற்றுமையைக் குலைத்து, விடுதலைப் போராட்டத்தை சின்னா பின்னமாக்கும் கபடத்தனத்துக்கு சிலர் பலியா னதால், இன்று நாமே எம்மை இழிவுபடுத்திக் கொள்ளும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி விட்டோம்.

ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் இனவாதத் தின் பெயரால் ஒடுக்கும் சிங்கள ஆட்சியாளர் களுக்கு துணைபோகும் தமிழர்கள் இன்னமும் இருக்கிறார்கள் எனின் இதனை விட மிகப் பெரும் கொடூரம் வேறு எதுவுமே இருக்க முடியாது.

தமது கட்டுப்பாடு என்று கூறிவிட்டு பொது மக்கள் மீது கண்டபாட்டில் தாக்குதல் நடத்தும் படையினரின் நோக்கம் என்ன? அப்பாவி மக்களை சுட்டுக் கொன்று விட்டு தாக்குதல் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக கூறும் படையினரின் பழைய பல்லவி மீண்டும் பல்லக்கு ஏறுகின்றது. தமிழ் மக்கள் விழிப்பாக இருப்பது அவ சியமா னதாகும்.

# புலிகள் -இராணுவம் இடையே மீண்டும் போர் மூளும் அபாயம்

## தமிழக 'தினகரன்' நாளேடு ஆசிரியர் தலையங்கம்

(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப் புலிகள்-இராணுவம் இடையே மீணடும் போர் மூளும் அபாயம ஏற்பட்டுள்ளது என இந்திய நாளேடான 'தினகரன்' தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.தினகரனின் ஆசிரிய தலையங்கத்தில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர நோர்வே, ஜப்பன், ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றை சேர்ந்த தூதுக் குழுவினர் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை அரசுக்கும்-விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்பாட்டை அடுதது கடந்த 2002ஆம் ஆண்டில் போர் நிறுத்த ஒப்பந்தம கையெழுத்தானது.

இதையடுத்து ,இலங்கையில் சற்று அமைதி நிலவி யது. இந்த நிலையில் சமீபத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவின் ஆதரவாளர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற் றார்.இது தமிழர்கள் மனதில் கவலையை ஏற்படுத்தியது.

ஜனாதிபதியாக ராஜபக்ஷ பதவியேற்ற பின் இலங்கை யில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சிறு சிறு மோதல்கள் நடக்க ஆரம்பித்தன. யாழ்ப்பாணத தில் தமிழ்ப் பெண்கள் இராணுவத்தினரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுவது அதிகரித்துள்ளது. புங்குடுதீவில 19 வயது யுவதியை கடற்படையினர் கடத்திச சென்று கற்பழித்துக கொன்ற சம்பவம் தமிழர்களிடம் பெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் அண்மையில் மன்னாரில் இலங் கைக் கடற்படையைச் சேர்ந்த 30 வீரர்கள் ஒரு பஸ்ஸில் சென்று கொண்டிருந்தனர். பேசாலை என்ற இடத்தில் கண்ணிவெடி வெடித்ததில் 15 வீரர்கள் இறந்தனர். மற்றவர்கள் படுகாய மடைந்தனர். இதற்கு விடுதலைப் புலிகள் தான் காரணம் என்று இலங்கை அரசு குற்றம்சாட்டியது. இதை விடு தலைப் புலிகள் மறுத்தனர். விடுதலைப் புலிகள் -இராணு வம் மோதல் அதிகரித்துள்ளதால் அங்கு மீண்டும் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண அடுத்த ஆண்டில் இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும் இலலாவிடில் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபா கரன் கடந்த மாதம் மாவீரர் நாள் உரையில் எச்சரித்திருந் தார்.

'ஆசியாவில் எந்தப் பகுதியிலும் புலிகளுடன் பேசத் தயார்' என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தா. இந்தப் பேச்சுவார்த்தையை நடத்த ஜப்பான் முன் வந்தது. ஆனால் ஐரோப்பிய யூனியன் பகுதியில் தான் பேச்சு வார்த்தை நடத்தப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள கூறினர்.

இந்த சூழ்நிலையில், இலங்கையில் மீண்டும் போர் மூள்வதைத் தடுக்க சர்வதேச அளவில் இந்தியா உட்பட பல நாடுகளும் முயற்சிசெய்து வருகின்றன. போர் நிறுத்த ஒப்பந்தம் தொடரவேண்டும் என்றும் அமைதிப் பேசசை இலங்கை அரசும் -புலிகளும் தொடர்ந்து மேற் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் மீறும் அபாயத்தைத் தடுக்க இலங்கையில் அமைதிமுயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வே,ஜப்பான், ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றைச் சேர்ந்த தூதுக் குழுவினர் இலஙஐககுகு வுநதுளுளுனர். பீருதுமுர் ருடுணு சீறூ வீகுருமுநுர்யுகுகுஐவுயுமு ஆவுர்குளு சுநுதுீதுதுபு பேசுீனுர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறாமல், பேச்சுவார்த் தைக்கு விடுதலைப்புலிகள் உடன் சம்மதிக்க வேண்டும் என்று தூதுக் குழுவினரிடம் இலங்கை பிரதமர் கூறிய தாக இலங்கை அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக் கின்றது.தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தூதுக் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

முன்னதாக தூதுக்குழுவினர் கூறுகையில், 'இலங் கையில் இப்போது போர்நிறுத்த ஒப்பந்தம் கேள்விக் குறியாகி விடுமோ என்று அச்சம் ஏற்பட்டுள்து. இந்த நிலைமையை மாற்ற தீவிர முயற்சி மேற்கொண்டுள் ளோம்'என்றனர்.

வெளிநாடுகளில் தங்கியுள்ள அகதிகள், இலங்கை திரும்பிவரும் சூழ்நிலையில் இராணுவம்-விடுதலைப் புலிகள் இடையே ஏற்பட்டுவரும் சிறுசிறு மோதல்கள் பெரிய அளவில் போராக மாறிவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

இந்நிலையில் இலங்கையில் போர் மூளும் அபாயம் ஏற்படடுள்ளதால் அகதிகள் போர்வையில் விடுதலைப புலிகள் இந்தியாவிற்குள் ஊடுருவ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் இலங்கைத் தமிழர்களும் உயிரைப் பாதுகாத் துக்கொள்ள இலங்கையில் இருந்தும் படகுகள் மூலம் இராமேஸ்வரம், மண்டபம்,பாம்பன் பகுதிகளுக்கு வரலாம என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தமிழக கடலோரப் பகுதியில் தமிழகப் பொலிஸார் கடலோராக் காவல் படை யினர் தீவிர் ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என அதில் மேலும் தெரிவிக்கபட்டுள்ளது. (ந)

# போர் மேகம் சூழ்ந்துள்ள இலங்கையில் எப்போது குண்டு மழை பெய்யுமோ?

## 'தினமணி' செய்தியில் அச்சம் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு.மாவட்டப் பாரா ளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொலலப்பட்டதை அடுத்து இலங்கையில் போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தமிழகத்திலிருந்து வெளிவரும் ''தினமணி'' நாளோடு தனது செய்தியில் தெரிவித் துள்ளது.

தினமணி இது தொடர்பில் வெளியிட்டுள்ள செய்தியில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடந்த சில வாரங்களாகவே பதற்றம் அதிகரித்து வரு கிறது. ஏற்கனவே இரு தினங்களுக்கு முன் இலங்கை கடற் படைக் கப்பல்களை புலிகள் சுட்டனர்.

நவம்பர் மாதம் மாவீரர் தினத்தில் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனின் பேச்சு அரசை எச்சரிகசும வகையில் அமைந்திருந்தது. இதை அடுத்து இரு தரப் பினரும் போருக்குத் தயாராவது போன்ற கருத்துகள் வலுப்பட்டன.

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி படுகொலை செய்யப்பட்ட தைக் கண்டித்துள்ள விடுதலைப் புலிகள் ஜாதிக ஹெல உறுமய என்ற அமைப்பின் மீது இக் கொலைக்கான குற்றம் சாட்டியுள்ளனர். இச்சம்பவத்தில் இலங்கை உளவுத் துறைக்குச் சம்பந்தம் இருப்பதாகவும் புகார் கூறியுள் ளனர்.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்த கருணா இயக்கத்தினர் நடத்தும் நெருப்பு இணையத்தளம ஜோசப் பரராஜசிங்கத்தைச் துரோகி என்று குறிப்பிட் டுளளதாகத் தெரியவருகிறது. எனவே இச் சம்பவத்தில் கருணா ஆதரவாளர்களுக்கு பங்கு இருக்குமோ? என்ற சந்தேகம் தோன்றியுள்ளது. இத்தகைய சூழநிலையில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன.ஆனால எப்போது குண்டு மழை பெய்யுமோ? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப் பிடப் பட்டுள்ளது. (ந)

# 2000 ரூபா பெறுமதியில் புதிய நாணயத்தாள்!

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி இராண்டாயிரம் ரூபா பெறும தியான நோட்டுக்களை அச்சிட்டுள்ளது.

இரண்டாயிரமாம் ஆண்டு இது தொடர்பான தீர்மானம எடுக்கப்பட்டிருந்தது. கடந்த நவம்பர் மாத இறுதியி லேயே இதற்கான அச்சுவேலைகள் முடிக்கப்பட்டன.

வழமையில்,ஏதேனுமொரு நாணயத்தாளில் 12-18 மாதங் களுக்கு தேவையான நோட்டுக்கள் மத்திய வங்கியில் வைத்திருக்கப்படுவதுண்டு. இதன் காரணமாகவே நோட் டுக்கள புழக்கத்திற்கு விடப்படாமலிருந்ததாக அறியப்ப டுகின்றது.

இதுபற்றி மத்தியவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிப்புக்கேற்ப நாணயத்தாள்களின் புழக்கமும் அதிகரிக்கவேண்டும்.


1981ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த உற்பத்தி 85,000 மில்லியன் ரூபாவாக இருந்தபோது ஆயிரம் ரூபாய் தாள்கள் வெளியிடப்பட்டன.

2000 ஆம் ஆண்டில் உற்பத்தி 12,57636 மில்லிய னாக உயர்ந்த போது 2ஆயிரம் ரூபா நோட்டுக்களை அச்சிடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தி ரூபா 20,29411 மில்லியனாக உயர்ந்துள்ளது. மேலும் மக்கள் பணத்தை பாதுகாப்புடன் எடுத்துச்செல்வதை இலகுபடுத்துதலும் இன்றைய தேவையாகும். புதிய நாணயத்தாள் பல பாது காப்பு அம்சங்களையும் கொண்டுள்ளது. இப்பொழுது ஆயிரம் ரூபாய் நோட்டுக்களில் போலிகளும் உலவுவதால் அதிகமான பாதுகாப்பு அம்சங்கள் இப் புதிய நாணயத்தாளில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியே நாணயத்தாள்களை விநியோகிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஏக நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-6)

## தினசரி தியானம்
## விவேகச் சிந்தனைகள்



எழுந்து நில் தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன்தோள் மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன். நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவை யான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள ளேயே குடி கொண்டிருக்கின்றன.

சுவாமி விவேகானந்தர்

# ஜோசப் எம்.பியின் பூதவுடல் நாளை அஞ்சலிக்காக கிளிநொச்சிக்கு

(மட்டக்களப்பு)

சுட்டுக் கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் பூதவுடல் நாளை மக்களின் அஞ்சலிக்காக வன்னிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. முன்னதாக பரராஜசிங்கத்தின் பூதவுடல் மட்டக்களப்பு நகரில் இருந்து வவுனதீவு ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நேற்று எடுத்துச் செல்லப்பட்டது.

கொக்கட்டிச் சோலையிலும் கரடியனாற்றிலும் பொது மக்களின் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டிருந்த சமயம் ஏராளமான மக்கள் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

கரடியனாறு தேனகத்தில் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்பட்டிருந்த சமயம் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு உட்பட முக்கிய தளபதிகளும் தமது இறுதி அஞ்சலியினை செலுத்தினர்.

நாளை வவுனியாவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்படும். பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சியில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இந்நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிளிநொச்சியில் அவருடைய உடலுக்கு தலைவர் பிரபாகரன் நேரில் சென்று அஞ்சலி செலுத்துவார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை ஜோசப் பரராஜசிங்கத்தின் புதல்வனும் புதல்வியும் வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்தடைந்தனர். அவரின் மற்றொரு மகன் இன்று இலங்கை வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதே வேளை இவரின் நல்லடக்க நிகழ்வு நாளை மறுதினம் மட்டக்களப்பு கல்லியங்காட்டில் நடைபெறவுள்ளது. (ச-4)

## வெட்டுப் புள்ளி இன்று வெளியாகும்

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கான வெட்டுப் புள்ளி விபரங்கள் இன்று வெளியிடப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இவ் விபரங்கள் வெளியிடப்படவிருந்த போதிலும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு புள்ளி விபரங்கள் சமர்ப்பிக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் இன்று வெளியிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அடுத்த மார்ச் மாத முடிவில் பல்கலைக்கழகங்களுக்கு இம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-4)



வடமராட்சி கிழக்கில் இடம் பெற்ற ஆழிப்பேரலை அனர்த்த ஓராண்டு நினைவு நிகழ்வில்...

## நிர்வாக சேவைப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நாளை நடைபெறவிருந்த போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டே அப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இப் பரீட்சை நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இதே வேளை புள்ளி விபர கட்டடவரைபுத் திணைக்களத்தின் மூன்றாம் தர உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கான பரீட்சையும் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக சேவை பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ்.குடாநாட்டில் நேற்றுப் பரவலாக விநியோகிக்கப்பட்டது. (ச-4)

## வில்லுப்பாட்டு

மருதனார்மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ்.நாச்சிமார் கோவிலடி ஸ்ரீதர் வில்லிசைக்குழுவினர் அருள்மிகு அநுமன் என்னும் பொருளில் வில்லிசை நிகழ்த்தவுள்ளனர். (ச)

### கிரனைட் வீச்சு...

சம்பவங்களினையடுத்து அப்பகுதியால் சென்ற மக்கள் இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். கைலாச பிள்ளையார் கோயில் சந்தியில் சம்பவத்தின் பின்னர் சென்ற வாகனம் ஒன்றின் மீது படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர். இதன்போது வாகனத்தின் பின்பகுதி சேதமடைந்தது. இச்சம்பவம் குறித்து பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ச-4)

### புளொட் உறுப்பினர் ...

சென்றுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறம்பைக்குளத்தில் உள்ள புளொட் இயக்கத்தின் முகாம் அருகிலுள்ள தேநீர்க் கடையிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அவருடன் இருந்த உதவியாளர் ஒருவரும் காயமடைந்துள்ளார். (ச-4)

### யாழில் இன்று...

சுதந்திரத்தை இழந்து சுதந்திரத்திற்காக போராடி நிற்கும் தமிழ்மக்களாகிய நாம் அனைவரும் எமது உண்மையான சுதந்திரத்தைப்பெறுவதற்காக ஒன்றிணைந்து செயற்படுவோம். எமது விடிவு எமது கைகளிலே என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### அரசஊழியர்களின்...

ஈடுபடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகம் எதிர்வரும் இரண்டாம் திகதிவரை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை அரச ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு தொடருமானால் யாழ்ப்பாணத்தில் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிப்படையும் நிலை உருவாகுமெனவும் அதற்கு முன்பதாக அரசாங்கம் உரிய நடவடிக்கை யெடுக்க வேண்டும் எனவும் பல்வேறு அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. (ச-132-4)

## தமிழ் துணைப் பண்டகளின்...

அவ்வறிக்கையின் சுருக்கம் வருமாறு; மட்டக்களப்பின் புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் தின நள்ளிரவு ஆராதனையின் போது மிகவும் கோழைத்தனமாகவும் வெறுக்கத்தக்க முறையிலும் இடம் பெற்ற ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் கொடூரமான படுகொலையை இலங்கை தமிழரசுக்கட்சி (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) வன்மையாகக் கண்டிக்கின்றது.

ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினராகவும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆரம்ப கால உறுப்பினராகவும் இருந்து வந்துள்ளார். தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயற்குழு மற்றும் அரசியல் குழு உறுப்பினராக இருந்த இவர் அகால மரணம் அடையும் போது தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூத்த துணைத் தலைவராகவும் செயற்பட்டு வந்தார்.

இனப் பிரச்சினைக்கு சமாதான முயற்சிகளில் தீர்வு காண்பதற்காக இடம் பெற்ற பல்வேறு பட்ட முயற்சிகளில் இவர் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார். மீண்டும் யுத்தம் ஆரம்பித்து விடக்கூடாது என்று அதிக அக்கறை கொண்ட இவர் பேச்சுவார்த்தை மூலம் நீதியானதும் நிலைத்து நிற்கக்கூடியதுமான ஒரு தீர்வு தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு எட்டப்பட வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.

*சமாதான முயற்சியில் சந்தேகம்*

ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் படு கொலையானது சமாதான முயற்சிகள் தொடர்பான அரசாங்கத்தின் உடைய நேர்மையானதும் நல்நோக்கம் கொண்டதுமான விசுவாசமான பற்றுதி மீது மிகப் பாரிய சந்தேகங்களை ஏற்படுத்தி இருக்கின்றது. தமிழ் தேசிய இனப்பிரச்சினையானது சமாதான வழியில் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் தெளிவான பற்றுறுதி கொண்டிருந்த ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் படுகொலை சமாதான முயற்சிகளின் மீது வீழ்ந்த பாரிய அடி என்பதைக் காட்ட வேண்டியது எமது கடமை என நாம் கருதுகின்றோம்.

உடனடியாக இவ்விதமான இரகசியமான தீய நோக்கம் கொண்ட தமிழ்த் துணைப்படைகளினுடனான சகல தொடர்புகளையும் துண்டிக்கும் படியாக நாங்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி கேட்கின்றோம்.

அத்துடன் சமாதான முயற்சிகளில் ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இதுவே ஒரே வழியாக அமையும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

### ஆட்டோசாரதிகள் இருவர்...

ஆட்டோவில் சிலரை வாடகைக்கு அமர்த்தி இவ் வீதியில் நேற்று முன்தினம் இரவு 7.45 மணியளவில் ரணமன் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு மற்றொரு ஆட்டோ சாரதியான ஜெயசுந்தரம் விஜயசீலன் என்பவரும் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது உடல் கிண்ணியா வில்கம விகாரைச்சந்தியில் கண்டெடுக்கப்பட்டது. இவரும் வாடகைக்கு நபர்களை அமர்த்திக் கொண்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டது. இருவரது சடலங்களும் நேற்றுக்காலை மீட்கப்பட்டதாக திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.